பொன். கு. கோதண்டபாணி
"ஆறிமுக ..."
25/.. திருவள்ளுவர் குடியிருப்பு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை 600 078.

ஆண்டொன்றுக்கு ரூ 24-0-0
ஆறு மாதத்திற்கு ரூ. 12-0-0
மூன்றுமாதத்திற்கு ரூ 6-0-0
3 மாதத்திற்குக் குறைவான சந்தா ஏற்றுக் கொள்ளமாட்டாது.

Regd No. M. 5458

விலை அணா ...

# மாலைமணி

(திராவிடத் தமிழ் தினசரி கருத்திதழ்)

ஆசிரியர்:— மு. கருணாநிதி
PHONE No. 4502

Editor :— M. KARUNANITHI
MALAI MANI TAMIL DAILY

இக்கு ...
நீடித்தவிளம்பரங்களு... விண்ணப்பித்துக் கொள்ளவும்.
மானேஜர்.

மலர் 3 சென்னை 8-2-52 வெள்ளி ★ வெளியூர் 9-2-52 சனி மணி 179


# சென்னையில் காங்கிரசல்லாத அரசாங்கம்

## அண்ணா—ஜீவா சந்திப்பு!

கம்யூனிஸ்டு தலைவர் தோழர் ப. ஜீவானந்தம் அவர்களும் மற்றும் சில கம்யூனிஸ்ட் தோழர்களும் தற்கால அரசியல் நெருக்கடிகள்பற்றி விவாதிக்கவேண்டி தி. மு. கழக பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களை சந்திக்க காஞ்சீபுரம் சென்றிருப்பதாக தெரியவருகிறது.

## கொள்கை வகுப்பது பற்றி ஆலோசனை

### கூட்டு முன்னணிக்குப் பேராதரவு

சென்னை, பிப். 8—

12-ந் தேதியன்று சென்னையில் நடைபெறவிருக்கும் சர்வ கட்சி மகாநாட்டில் விவாதிப்பதற்கான விஷயங்கள் பற்றி நேற்று மாலை பிரகாசத்தின் இல்லத்தில் கம்யூனிஸ்ட் தலைவர்களும், மக்கள் கட்சி தலைவர்களும் பேச்சு வார்த்தை நடத்தினர்.

கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில ஏ. கே. கோபாலன் பி. ராமமூர்த்தி ஆகியவர்களும், மக்கள் கட்சி சார்பில் டி. பிரகாசம், புலுசு சாம்பமூர்த்தி, கேளப்பன், எம். பி. கோவிந்த மேனன் ஆகியவர்களும் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர்.

உ... [illegible] ... வரவுசெலவு பற்றியும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக கம்யூனிஸ்டு தலைவர் பி. ராமமூர்த்தி ஒரு பேட்டியில் கூறினார். அடிப்படை விஷயங்கள் குறித்து கூட்டததில் விவாதிக்கப்பட்டதாக அவர் அறிவித்தார். மேற்படி விஷயங்கள் குறித்து கம்யூனிஸ்டுகளும் மக்கள் கட்சித் தலைவர்களும் தங்கள் தங்கள் கட்சிகளின் கொள்கைகளைப் பரிமாறிக் கொண்டதாக ராமமூர்த்தி சொன்னார்.

இதர விஷயங்கள் குறித்துச்சர்வ கட்சிமாநாட்டின் முதல் நாள் விவாதிக்கப்படும் என்றும் மக்கள் கட்சியினர் வெளியிட்ட சில யோசனைகளை கம்யூனிஸ்டு கட்சி ஆலோசிக்குமென்றும் அவர் அறிவித்தார்.

சென்னை மாகாணத்தில் ஸ்திரமானதும், முற்போக்கானதுமான சர்க்காரை அமைக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி நேற்று மாலை லட்சுமிபுரத்தில் நடைபெற்ற சுயேச்சை அபேட்சகர்கள் முன்னணிக் கூட்டமொன்று நேற்று மாலை நடைபெற்றது. சுப்பரத்தினம் தலைமை வகித்தார். கூட்டத்தில் சுமார் பத்து சுயேச்சை அபேட்சகர்கள் கலந்துகொண்டனர்.

காங்கிரஸ் அல்லாத இதர கட்சிகளுடன் ஒத்துழைத்து சென்னை மாகாணத்தில் முன்னேற்றக் கொள்கைகளுடன் கூடியதும. ஸ்திரமானதுமானதொரு சர்க்காரை அமைகக வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேர்தலில் வெற்றிபெற்றுள்ள 62 சுயேச்சை அபேட்சகர்களைக் கொண்டதொரு பலம் வாயந்த கட்சி நிறுவ முடிவு செய்யப்பட்டது.

மேற்படிகட்சியை அமைக்கும் விஷயத்தில் தகுந்த முடிவு செய்வதற்கு சுப்பரத்தினத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டது. 12-ந் தேதியன்று நடைபெறவிருக்கும் காங்கிரஸல்லாத சர்வ கட்சி [illegible] ...பட்டது.

சென்னை மாகாணத்தில் காங்கிரஸல்லாதார் கூட்டு முன்னணி அமைப்பது சம்பந்தமாக முடிவு செய்ய தேர்தலில் வெற்றி பெற்றிருக்கும் முஸ்லிம் லீகர்களும் லீகால்களும் ஆதரிக்கப்பட்ட சுயேச்சை மெம்பர்களுமாக சுமார் 25 பேர் இன்று காலை எர்ரபாலு செட்டி தெருவில் லீக் காரியாலயத்தில் கூடி ஆலோசித்தனர்.

கம்யூனிஸ்டு கட்சி உட்பட காங்கிரஸல்லாத எல்லா கட்சியினரும் சேர்ந்துக் கூட்டு முன்னணி அமைப்பதை கூட்டத்தில பெரும்பான்மையினர் ஆதரித்ததாகத் தெரிகிறது.

கூட்டத்தில் பிறகுராஜன் சேலம் கிருஷ்ணமூர்த்தி கவுண்டர் திருச்சி ராஜசிதம்பர ரெட்டியார் ஆகியோரும் கலந்துக் கொண்டனர்

## மாகாணக் கவர்னர்கள் ராஜினமா

### புதிய கவனர்கள் நியமிக்கப்படுவதற்கு வசதி

புதுடெல்லி, பிப்; 7—

மாகாணக் கவர்னர்கள் அனைவரும் இந்திய ஜனாதிபதியிடம் தங்களது ராஜினமாக்களைச் சமர்ப்பித்துள்ள புதிய கவர்னர்கள் நியமிக்கபடுவதற்கு வசதியாக அவர்கள் ராஜினமா சமர்ப்பித்துள்ளனர்.

சட்டசபைகள் தேர்தல்கள் முடிந்தவுடன் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதிதான் புதிய கவர்னர்களை நியமனம் செய்வார்.

ஓரிரண்டுமாகாணங்களில் தவிர இதர மாகாணங்களிலெல்லாம் புதிய கவர்னர்களே நியமிக்கம் படுவார்கள் எனத் தெரிகிறது.

## ஆந்திரா பிரிவினைக் கிளர்ச்சித்

### திட்டங்கள் 10 ந்தேதி வகுக்கப்படும்

விஜயவாடா பிப், 7—

ஆந்திர மாகாண அமைப்புச் சங்கத்தின் கூட்டமொன்று விஜயவாடாவில் இம்மாதம் 10ந் தேதி நடைபெறும். ஆந்திர மாகாணப் பிரிவினைக்காக நடக்க வேண்டிய கிளர்ச்சிக்கான திட்டங்கள் அப்போது வகுக்கப்படும்,

ஆந்திர சாமியாரின் வேண்டுகோளுக்கிணங்க சில ஆந்திர எம், எல். ஏக்கள் இனி சட்டசபைக் கூட்டங்களில் தெலுங்கிலேயே பேச முடிவு செய்துள்ளனர்.

ஆந்திராவில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எம். எல். ஏக்கள் அனைவரும் ஆந்திர மாகாணப் பிரிவினைக்காகப்பாடுபடுவர் என்று விஜயவாடாவில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில், டெல்லி சட்டசபைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர் ஹரீந்திரநாத் சட்டோபத்தியாயா [illegible] எல்லா கட்சிகளும் வித்தியாசத்தையும் ஒழித்துக்கட்ட ஒன்றுபட்டு பாடுபட முன்வர வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

## ஒரு ஏகராவுக்கு 5990 ராத்தல் நெல் விளைவு

### தாராபுரத்தில் சம்பா அறுவடை

தாராபுரம் பிப் 7—

கொளத்துப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த சர்வே நெம்பர் 2158 வயலில் 5990 ராத்தல்நெல் உற்பத்தியாகி இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

சென்ற கோடை நெல் விளைச்சல் போட்டி பரிசோதனையின் போது ஒரு ஏகராவுக்கு 6700 ராத்தல் நெல் உற்பத்தியாகி இருப்பதாக கணக்கிடப்பட்டிருக்கின்றது அற்சயம் விளைச்சல் [illegible] ... இல்லாமையும், தண்ணீர் போதுமானதாக இல்லாததும் என்று கூறப்படுகிறது. மற்றப்படி எரு உரம் ஏராளமாகப் போடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது இம்மாதிரியான விளைச்சல் போட்டித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## நேப்பாள கலகத் தலைவர்

### திபேத்துக்கு ஒடிவிட்டார்.

காட்மண்டு, பிப். 7—

நேப்பாள கலகத் தலைவரான டாக்டர் கே ஐஸிங் திபேத்துக்கு ஓடி விட்டதாகத் தெரிகிறது. அவர் தப்பி சென்றிருக்கக்கூடும் என்று நேப்பாள அதிகார வட்டாரங்கள் கூறின.

ராசுவா கணவாய்க்கு 20 மைல் வட மேற்கில் உள்ள திபேத் பிரதேசமான கேகாங்கில் அவர் இப்போது இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கலகத் தலைவர் திபேத்துக்குள் நுழைந்தால் அவரைப் பிடித்து அனுப்புவதாக சமீபத்தில் திபேத் [illegible] உறுதியளித்திருக்கிறது ஆனால கேகாங்கில் திபேத் படைகள் எதுவும் வைக்கப்படவில்லையாதலால் அந்த உறுதிமொழியை நிறைவேற்ற முடியுமா என்பது சந்தேகமே.

நேப்பாள சர்க்கார் உள் நாட்டிலாகா ஒன்று விடுத்திருக்கும் ஒரு அறிக்கையில் கூறுவதாவது:—கலகத் தலைவர் டாக்டா ஸிங் தப்பியோடப் போகிறார் என்ற தகவல் சர்க்காருக்கு முன்னதாகவே கிடைத்தது அவருடைய முயற்சிகளைத் தடுக்கும்படி சர்க்கார் உத்தரவு பிறப்பித்தது ஆனால் ரக்ஷ தளத்தைச் சேர்ந்த சில பெரிய அதிகாரிகள் அவ்வுத்தரவுப்படி நடக்கவில்லை.

## கொரியா போர் நிறுத்தம்

### பேச்சில் முன்னேற்றம்

டோக்கியோ, பிப். 7—

கொரியா போர் நிறுத்தப் பேச்சில் இன்று சிறிது முன்னேற்றம் காணப்பட்டது.

ஐ நா தரப்பினர் வசமுள்ள கம்யூனிஸ்ட்டு கைதிகளின் தொகையானது கம்யூனிஸ்டுகளிடம் உள்ள ஐ நா யுத்தக்கைதிகளின் தொகையைவிட அதிகமாயிருக்கிறதல்லவா யுத்தக் கைதிகள்பரிவர்த்தனை சம்பந்தமாக இருதரப்பாரிடையேநடந்த பேச்சு வார்த்தையின் போது கம்யூனிஸ்டு யுத்தக் கைதிகள் அனைவரும் தங்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கோரினர் அந்தக் கோரிக்கைக்கு இப்போதுதான் ஐ நா தரப்பார் ஏற்றுக் கொண்டார்.

ஐ நா தரப்பார் வசம் 1,21000 கம்யூனிஸ்டு யுத்தக் கைதிகள் உள்ளனர்,

## எகிப்தை ஒடுக்க அமெரிக்கத் துருப்புகள்

### பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் கண்டனம்

லண்டன், பிப். 7—

எகிப்து தேசத்தை ஒடுக்க அமெரிக்க பிரஞ்சு துருப்புகளும் அனுப்பப்பட வேண்டுமென்று யோசனை கூறுமுன்பாக எகிப்திய சர்க்காரை பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் கலந்தாலோசித்தார் என்று பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் நேற்று கேட்கப்பட்டது.

எகிப்துக்கு அமேரிக்க பிரஞ்சு துருப்புகளை அனுப்ப தாம் திட்டமெதுவும் வகுக்கவில்லை என்றும், மத்ய கிழக்கு நாடுகள் பாதுகாப்பு பொறுப்பை எல்லா தேசங்களும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்பதே தமது கருத்தென்றும் பிரதமர் சர்ச்சில் பதிலளித்தார்.

எகிப்து மீது படை எடுக்கும்படி அமெரிக்காவையும், பிரான்ஸையும் பிரதமர்சர்ச்சில்அழைத்தது பிரிட்டிஷ் வெளிவிவகார இலாகாவுக்கே சங்கடமான நிலைமையை உண்டாக்கிவிட்டதென்றும், இது மிகவும் ஒழுங்கீனமானதென்றும் தொழிற்கட்சி மெம்பர் ராங்கிஸ் என்பவர் சொல்லவும் இல்லை! என்று சர்ச்சில் கட்சியினர் கூச்சலிட்டனர்.

## பிரிட்டனில் ராணுவ ஏற்பாடுகளுக்கு

### அமெரிக்காவின் நிதி உதவி

பிரிட்டனின் இராணுவப் பெருக்க ஏற்பாடுகளுக்கு அத்தியாவசியமாகவுள்ள பொருள்களை இறக்குமதி செய்வதற்காக அமெரிக்கா ரூ, 150 கோடி தந்து உதவும் என்று அமெரிக்க சட்டசபையில் ஜனாதிபதி ட்ருமன் கூறினார்,

பிரிட்டன், பிரான்சு, கிரீஸ், துருக்கி, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளுக்கு அமெரிக்கா தந்து உதவ இருக்கும் நிதியிலிருந்து இந்த பணம் அளிக்கப்படும். பிரான்ஸ் தேசத்திற்கு ரூ 50 கோடி கிடைக்கும்.

## ராஜஸ்தானில் காங்கிரசு சூழ்ச்சி

### புதிய எம். எல். ஏக்களை விலக்கச் சூழ்ச்சி

புதுடெல்லி, பிப் 7—

ராஜஸ்தானில் காங்கிரசை எதிர்த்து போட்டியிட்டு வெற்றிபெற்ற சுமார் 50 ஜாகிர்தார்களை சட்டசபைக்குள் பிரவேசிக்க வொட்டாமல் செய்ய காங்கிரஸ்காரர்கள் பெரு முயற்சி செய்து வருகிறார்கள்.

ராஜஸ்தானத்தில் காங்கிரஸுக்கு மெஜாரிடி கிடைக்கும் என்று தோன்றவில்லை இதுவரை தேர்தல் முடிவு வெளியான 132 ஸ்தானங்களில் 63 ஸ்தானங்களே காங்கிரசுக்கு கிடைத்துள்ளன. காங்கிரஸல்லாதாருக்கு 59 ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. இன்னும் 28 ஸ்தானங்களின் முடிவு வெளியாக வேண்டியிருக்கிறது. தங்களுக்கு மெஜாரிடி கிடைக்காது என்று தோன்றவே காங்கிரஸ்காரர்கள் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக ஒரு புது வழியை கண்டு பிடித்திருக்கிறார்கள். தேர்தலில் வெற்றி பெற்றவர்களில் சுமார் 50 பேர்கள் ஜாகீர்தார்கள் (ஜமீன்தார்கள்) ஜாகீர்தார்கள் அரசாங்க ஊழியர்கள் என்றும், அந்த முறையில் அவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கில்லை என்றும், போட்டியிட்டு ஜெயித்தவர்களின் வெற்றி செல்லாது என்றும் புதுப்பிரச்னையை கிளப்ப காங்கிரஸ்காரர்கள் உத்தேசித்துள்ளனர். இது சம்பந்தமாக ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

காங்கிரஸ்காரர்களின் இந்தத் திட்டத்தைப்பற்றி முடிவு செய்ய இம்மாத இரண்டாவது வாரத்தில் ராஜஸ்தான் பிரதேச காங்கிரஸின் காரியக் கமிட்டிக் கூட்டம்நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜாகீர்தார் தமது ஜாகீர் நிலத்தில் வரி வசூலித்தல் வேலையை கவனிப்பதுடன் சட்டப்படி கிராம அதிகாரியாகவும், போலீஸ் அதிகாரியாகவும் வேலை செய்கிறார். இந்த சேவைக்காக வசூலான வரியில் ஒரு பகுதியை அவர் எடுத்துக் கொள்கிறார். இதன்படி பார்த்தால் அர... லாபம் ... ஜாகீர் ...

## ஸ்தல ஸ்தாபனத் தொகுதிகள்

### காங்கிரஸ் போட்டியிடாது

சென்னை, பிப். 7—

சென்னை மேல்சபைக்கு ஸ்தல ஸ்தாபன தொகுதிகளிலிருந்து போட்டியிட காங்கிரஸ் அபேட்சகர்களை நிறுத்திவைப்பதில்லை என்று தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தல் கமிட்டி தீர்மானித்துள்ளது. கமிட்டியின் கூட்டம நேற்று நடை பெற்றபோது மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

## கிராமங்களில் ரேடியோ அமைப்பு

சென்னை பிப் 7—

பிப்ரவரி 2-ந் தேதியோடு முடிவடைந்த வாரத்தில் 24 கிராமங்களில் ரேடியோ செட்டுகள் வைக்கப்பட்டன இதுவரை மொத்தம் 1790 கிராமங்களில் ரேடியோ வெக்கப்பட்டிருக்கின்றன.

## ஜார்ஜ்மன்னரின் உடல்

### அடுத்தவாரம் அடக்கம் செய்யப்படும்

#### மன்னரின் உடலை மக்கள் பார்வையிட வசதி

லண்டன் பிப் 7—

பிரிட்டிஷ் மன்னர் ஆரும் ஜார்ஜின் சவ அடக்கம் அநேகமாக அடுத்தவாரம் வெள்ளிக்கிழமை நடைபெறலாம் என்று அதிகாரப் பூர்வமான வட்டாரத்தினர் இன்று தெரிவித்தனர் ஆனல் எப்பொழுது சவஅடக்கம் நடக்கும் என்று புதிய அரசி எலிஸபெத இன்றிரவு லண்டனுக்குத் திரும்பி வந்த பிறகு இறுதியாக முடிவு செய்வார் என்று அந்த வட்டாரத்தினர் தெரிவித்தனர்.

ஆரும் ஜார்ஜ் மன்னருடைய உடல், பார்லிமெண்ட் கட்டிடத்தை அடுத்துள்ள வெஸ்ட்மினிஸ்டர் மண்டபத்திற்குக் கொண்டுவரப்படும் அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் அவர் உடலைகண்டுகடைசி மரியாதைச் செலுத்துவர்.

இதற்கு முன்பு பிரிட்டனை ஆண்ட மன்னாகள் புதைக்கபட்டுள்ள இடத்தில்தான் ஆரும் ஜார்ஜ் மன்னரும் புதைக்கப்படுவார்.

ஆரும் ஜார்ஜ் மன்னரின் மனைவி எலிஸபெத் ராணியும், அவரது இரண்டாவது மகள் மார்க்கரெட்டும் இன்று சோகத் திரையணிந்து, மிகவும் துக்ககரமாகக் காணப்பட்டனர். இன்று காலை அவர்கள கிறிஸ்தவ ஆலயத்துக்குச் சென்றுபிரார்த்தனை செய்தனர்.

இன்று மாலை 4-20 (லண்... மணிப்படி) மணிக்... னின் புதிய ... பெத் ...

# தேர்தல் முடிந்தது

## இனிமேல்......?

.........

நாட்டிலே குமுறிக் கொண்டிருந்த தேர்தல் புயல் அனேகமாக ஓய்ந்து விட்டது. புதுநிலைக்கான முயற்சிகள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்கின்றன. ஐந்தாண்டு காலம் அடக்குமுறை பாசிச ஆட்சி நடத்தி வந்தவர்கள் பொது மக்களின் தீர்ப்பை பரிசாகப் பெற்று மூலையில் முடங்கிவிட்டார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தார் துணிவிருந்தால் தேர்தலில் நின்று பார்க்கட்டுமே என்று தோள்தட்டினர் காமராஜர் நேரடியாகத் தேர்தலில் கலந்து கொள்ளாமலே குறுகிய காலத்தில் ஆதரவை மட்டும் அளித்து காங்கிரசை முறிய அடித்து வெற்றிக்கொடி பிடித்திடும் வகையில் ஐம்பது தோழர்களை திராவிட முன்னேற்றக் கழகம் உலவவிட்டிருப்பது கண்டு "தோற்றேன் தோற்றேன்" என்று முகாரி பாடுகிறார் இப்போது!

சிறையிலே கொலைச் சிந்தும், வீதியிலே பிணமும், வேடிக்கை விருத்தங்களாக ஆகிவிட்ட காங்கிரஸ் கொலு மண்டபத்திலே இடிவிழுந்து விட்டது, அதுவும் பேரிடி!

சர்வாதி[...] காலடியிலே மக்களைத் துவைத்து வாழ்ந்த நேரத்தில் அவர்களை வீழ்த்திட புரட்சிகள் உருவாயின. சர்வாதிகாரிகளின் தலைகள் உருட்டப்பட்டன.

அரசியலிலே நாகரீகம் நல்ல அளவுக்கு அமையாத நேரமது!

கொடியவர்க்குத் தண்டனை கொலை-குடும்பத்தோடு கொலை-கூட்டோடு கொலை-என்ற விதத்திலே தரப்பட்ட காலம்.

பழிவாங்கும் உணர்ச்சி பலாத்காரத்தோடு இணைந்திருந்த நேரம்.

ஆகவே இத்தகைய தண்டனைகள் குற்றமாகக் கூட கருதப்படாமல் இருந்தன.

இன்றோ அரசியலிலே நாகரீகம் தேவைப்படுகிறது. காட்டுமிராண்டித்தனம்—பேய்க்கூத்து—இவைபோன்ற தாண்டவங்கள் கூடாது என்று எண்ணுகிற நிலை வளர்ந்திருக்கிறது. இப்போதே காந்தியாரும், லியாகத்தும், அவுங்சானும், மற்றும் சிலரும் கொலைசெய்யப்படுகிற அளவுக்கு அரசியல் நேர்மை இருந்திடுகிறது என்றால், அரசியல் நாகரீகமற்ற அந்த நாட்களிலே நடைபெற்ற புரட்சிகளிலே எதிரிகள்-அதுவும் கொடியவர்கள் கொல்லப்படுவதிலே ஆச்சரியம் என்ன இருக்கமுடியும்.

அந்நாள் கொடுங்கோலர் கொலையை வெகுமதியாக [...]ர்.

[...]காலர்

இந்நாள் ஓட்டுச் சீட்டு இப்படி மாறியிருக்கிறது மக்களின் தீர்ப்பு முறை.

அந்தத் தீர்ப்பு முறையிலேதான் மக்கள் மன்றத்திலே குற்றவாளியாக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தவர்கள் பலர் வீழ்த்தப்பட்டனர். வெற்றிகரமாக வீழ்த்தப்பட்டனர்.

நமது இதயதாகம் ஓரளவு அடங்கிவிட்டது, நாட்டைக் காடாக்கியவர்கள் நலிவுற்றது கண்டு!

கள்ளிக்காட்டை அழித்து விடுவதுமட்டும் நம் வேலையல்லவே! கள்ளியிருந்த இடத்திலே பள்ளி அமைப்பதல்லவா நம் லட்சியம்; இதயகீதம் எல்லாமே!

காங்கிரசை ஒழித்துக்கட்டுவதைமட்டு லட்சியமாகக் கொண்டிருந்தால் தேர்தலின் போது ஆதரவு கேட்டவர்களிடம் திராவிடநாட்டுப் பிரச்சினையை முக்கியமாக வைத்திருக்காது, தி. மு. கழகம்!

தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கும் கொள்கை தி. மு. கழகத்திடம் இல்லாத காரணத்தால்தான் திராவிட நாட்டுப் பிரச்சினையை உயிர்ப் பிரச்சினையாக-அடிப்படைப் பிரச்சினையாகத் தேர்தல் காலத்திலும் அனுஷ்டித்து வந்தது, தி. மு. கழகம்.

எச[...]ஏளனம்-கிண்டல் கேலி-கண்டனம் -இவைகளை யெல்லம் பொருட்படுத்தாமல் இலட்சியம் ஒன்றையே முன்னிருத்தி தேர்தலில் தன் பிரச்சாரத்தைச்செய்ததுகழகம்.

கிராமங்களிலே-பட்டி-தொட்டிகளிலே-இதுவரை கேள்விப்பட்டிராத குப்பங்களிலே தேர்தல் பிரச்சாரத்திற்காக தி. மு. க. வீரர்கள் சென்றபோழ்து திராவிடப் பிரிவினை முழக்கத்தை மக்கள் மனதிலே பதியவைத்திடத் தவறவில்லை.

தன் லட்சியத்தைப் பரப்பிட தேர்தலையும் ஒரு சந்தர்ப்பமாக தி. மு. க, கருதியது! அப்படிக் கருதியதிலே வெற்றியும் பெற்றது.

ஆதரவு பெற்றவர்கள்-தி. மு. க. ஒப்பந்த ஏட்டிலே கையெழுத்திட்டவர்கள்—திராவிட நாட்டை வாங்கிக்கொடுத்து விடுவார்கள் என்ற அசட்டு நம்பிக்கை கொண்டு அலையவில்லை நாம். நமது போராட்டத்திற்கான பல ஆயுதங்களிலே சட்டசபை மக்கள் சபைகளிலே எழும் குரலையும் ஒரு ஆயுதமாகக் கருதுகிறோம். லட்சியம் என்பது கல்லால் அடித்தவுடன் கீழே விழுகிற மாங்காயல்ல! மாங்காய் கூட குறி தவறினால் கீழே விழாது.

எந்த நாட்டு அரசியல் சரித்திரத்தை எடுத்தாலும் லட்சியப் போராட்டத்திலே முதல் மோதுதலிலேயே வெற்றி பெற்றுவிட வில்லை. ரஷ்ய நாட்டுப் புரட்சி ஒரே நாளில் [...]டிந்துவிடவில்லை. சீன[...] வாழ்வு நினைத்த[...]த்துவிட [...]னைக் [...]ப்

வருடங்கள் நடத்தியிருக்கிறது.

அது மட்டுமல்ல, வெள்ளையனாட்சி நடைபெறும் போது அமைந்த காங்கிரஸ் மந்திரி சபைகள் விடுதலைக்கானக் குரலை எழுப்பியதே தவிர அப்போதே சுதந்திரத்தை மூட்டைகட்டிக் கொண்டு எடுத்துவந்து மக்கள் கையிலே கொடுத்துவிட வில்லை-இவையெல்லாம் அரசியலிலே அப்பாவிகளாய் இருப்பவர்கள் கூட அறிந்த விஷயம்தான்.

வெளியிலே நாம் நடத்த இருக்கும் திராவிடப் பிரிவினைப் போராட்டத்திற்கு சட்டசபைகளிலும்—மக்கள் சபைகளிலும் ஆதரவுக் குரல் எழுப்ப வேண்டும் என்று நிபந்தனை கேட்டோம். அப்படி நிபந்தனை தந்தவர்களை மட்டும் திராவிடநாட்டுப் பிரச்சினை நம்பியிருக்கிறது என்று அர்த்தமல்ல; நிபந்தனை கேட்கிற அளவுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்திருக்கிறது என்றுதான் அர்த்தம்.

இதைப் புரிந்துகொண்டு தான் விஷமிகள் விஷத்தை வாரி யிறைக்கிறார்கள். புரியாதவர்போலவும் நடிக்கிறார்கள்.

பொறுமையின் விளைவு தான் என்ற உண்மையை உணர்ந்துகொண்டு செயலாற்றிடப் புறப்படவேண்டும் திராவிடக் காளையர்!

நாடெங்கும் திராவிட நாதம் கிளம்பிட நல்லதோர் வாய்ப்பாக அமைந்தது கடந்துபோன தேர்தல்.

[...]டது; தேர்தலுடன் நம் பிரச்சினைகள் முடிந்துவிடவில்லை — திராவிட நாடு கிடைக்கும் வரையில், அப்படிக் கிடைத்த திராவிடத்திலே சமத்துவம் கொழிக்கும் வழி வகுக்கும் வரையில், வகுக்கப்பட்ட சமத்துவம் வகையோடு வாழ்ந்திட பாதுகாத்திடும் பணியிருக்கும் வரையில் நம் பிரச்னைகள் முடிந்துவிடாது. நம் இலட்சியக்குரல் முடிந்துவிடாது.

அடுத்துஅமைப் போகும் மந்திரி சபை யாருடையதாயிருந்தாலும், எந்தக் கட்சியுடையதாயிருந்தாலும், திராவிடத்தை டில்லியிலிருந்து வெட்டியெடுக்கும் வீரப்போராட்டத்திலே தி. மு. கழகத்தார் குதித்திடத்தான் போகிறார்கள்

டில்லியின் கொடுமைகளை, டில்லியின் ஏகாதிபத்யத்தை, திராவிடம் இனியும் வளரவிட எண்ணவில்லை.

ஆகவேதான் திராவிடர், நாட்டுப் பிரிவினைப் போரிலே இன்னும் தீவிரமாக ஈடுபட இருக்கிறார்கள் அதற்குச் சட்டசபையிலேயிருந்து நமக்கு ஆதரவுக் குரல் கிளம்பும், அது டில்லியிலே எதிரொலிக்கும் அப்படிக் கிளம்புகிறகுரலை அடக்கிடும் போக்கினர் ஆட்சி பீடத்திலே அமர்ந்திருந்தால் அதற்காக கவலைப்படப் போவதில்லை திராவிடர் எழுச்சிக்கடல்!

அந்தக் கடலின் கொந்தளிப்பு,

டில்லி மூலவர்களை முழ்கடிக்கும்!

டில்லி தாசர்களை விரட்டியடிக்கும்!

பலரைப் பலி கொடுத்து வளர்த்தசொல் திராவிடம்!

வேலாயுதம், தாளமுத்து, நடராசன், அழகிரி செல்வம், இதோ நெல்லிக்குப்பம் மஜீது இப்படிப் பலப்பலர் கடைசி மூச்சை திராவிடம் என்ற மூச்சாக மாற்றி விட்டு மறைந்திருக்கிறார்கள்.

அந்த வீரர் பெருந்தகைகளின் திருவுருவத்தை நெஞ்சிலே ஏந்தி-திராவிட நாடு திராவிடருக்கே! என்ற முழக்கத்தை விண்ணதிர—மண்ணதிர-வீணரின் விழியதிர-எழுப்பி -- அடைந்தால் திராவிடநாடு இல்லையேல் இடுகாடு என்ற உறுதியுடன் நடந்திடுவோம்!...

திராவிடநாடு

திராவிடருக்கே!

# உழைப்பாளி கட்சியினர்க்கு

## உற்சாக வரவேற்பு!

## அண்ணா தலைமையில் வெற்றி வீரர்கள்

**"காங்கிரசுடன் சேரமாட்டோம்!"** — எஸ். எஸ். ராமசாமி

**"தகர்ப்போம் தடுப்புக்காவல் சட்டத்தை!"** — மதியழகன்

**"அரசியல் கைதிகளை விடுதலை செய்!"** — அண்ணா

**குறிஞ்சிப்பாடியில், விருந்து விழாவும்**

3 2-52 மாலை 5 மணிக்குக் குறிஞ்சிப்பாடி முசாபரி பங்களாவில் தி. மு. கழகத்தின் சார்பில், தென்னாற்காடு மாவட்டத்தில் தி. மு. க. ஆதரவுபெற்று உழைப்பாளிக் கட்சியின் சார்பில் வெற்றி பெற்ற உறுப்பினர்களைப் பாராட்ட தேநீர் விருந்தும் மாலை 6 மணிக்கு மாரி கோயில் திடலில் மாபெரும் பொதுக் கூட்டமும் நடைபெற்றன.

கூட்டத்திற்கு தி. மு. க. பொதுச் செயலாளர் C. N. அண்ணாதுரை M. A. அவர்கள் தலைமை வகித்தார்கள்.

பாராட்டு விழாவில், உழைப்பா[ளி] கட்சித் தலை[...]சாமி அ[வர்க]ளும். மற்றும் தோழர்கள் திருக்குறள் முனிசாமி சட்டசபை உறுப்பினர்கள் A.கோவிந்தசாமி (விக்ரவாண்டி) A. ரத்தினம் (கடலூர் ரிசர்வ்) S. ராதாகிருஷ்ணன் (பண்ருட்டி) அரங்கநாதன்)(செஞ்சி) பரமசிவம் (விருத்தாசலம்) கட்டிமுத்து (விருத்தாசலம் ரிசர்வ்) T. D. முத்துக் குமாரசாமி நாயுடு (திருக்கோயிலூர்) A. முத்துசாமி (திருககோயிலூர் ரிசர்வ்) ஜகந்நாதன் (திண்டிவனம் ரிசர்வ்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவர்கட்குத் தோழர் இளம்வழுதி அவர்கள் மாலைகள் அணிவித்து வரவேற்றுப் பேசினார்.

அண்ணா அவர்கள், இந்தத்தேர்தலில் உழைப்பாளர்கட்சிசார்பில் வெற்றி பெற்ற நண்பர்களையும் தலைவர் S. S. ராமசாமி அவர்களையும் பாராட்டி விட்டு பேசுகையில் குறிப்பிட்டதாவது.

"காங்கிரசின் தோல்வி, நமக்கு போதிக்கும் பாடமெல்லாம், அதிகாரத்தில் அமர்ந்தவர் ஆணவங்கொண்டால் அவர்களின் முடிவு எப்படியிருக்கும் என்பது தான்!

இந்தக் காங்கிரஸ் தோல்விக்கு முக்கியமான காரணமே பொதுமக்கள் அளித்த புனிதமான பொறுப்பை அதிகார போதையில் அலட்சியப் படுத்தியதும் அதுகொண்ட வீண் ஆணவமும் என்பதை மறந்து விடக்கூடாது.

தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளவர் நாட்டு நலிவுபோக்கும் பாதையில் நடைபோட வேண்டுமென்றும் சுட்டிக் காட்டினார்பொதுச் செயலாளர்.

[...]தன் வெற்றிக்குப் பெரும் உதவியாக அண்ணா அவர்களும் தி. மு. க. தோழர்களும் காரணமாயிருந்தார்கள் என்று குறிப்பிட்டு தங்களிடம்கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பை மக்கள் நலனை நினைவில் வைத்துப் பயன் படுத்துவோம என்றுகுறிப்பிட்டார். பிறகு தோழர் மதியழகன் அவர்கள் பேசுகையில "இந்நாளில் நாடெங்கும் அரசியல் கைதிகள் விடுதலை தினம் கொண்டாடப்படுகிறதென்றும் எங்குமில்லாத கொடுமையாக நம்நாட்டில் தாண்டவமாடும் தடுப்புத் காவல் சட்டத்தைத் தகர்த்தெறியமுற்படவேண்டும்" என்றும், குறிப்பிட்டார்.

தோழர் S. S. ராமசாமி அவர்கள் பேசுகையில் "பொது மக்கள் தங்களை எந்தக் காங்கிரஸ் ஒழிய வேண்டுமென்பதற்காகத தேர்ந்தெடுத்தார்களோ அந்த லட்சியத்தை உழைப்பாளர்கட்சி மறந்துவிடாது என்றும், காங்கிரசுடனோ காங்கிரஸ் கூட்டு மந்திரி சபையுடனோ உழைப்பாளர் கட்சி சேராது என்றும் சென்னை ராஜ்யத்தில் காங்கிரசல்லாத முற்போக்காளர் மந்திரி சபை அமைக்க ஒத்துழைக்கும் முயற்சிக்கும் என்று கூறியதோடு, அண்ணா அவர்கட்கும், தி. மு, கழகத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

முடிவுரையாக அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் அரசியல் கைதிகள் விடுதலை குறித்தும் விசாரணையின்றி சிறையிலடைக்கும் கொடுமை குறித்தும் வாரண்டுகளை ரத்து செய்ய வேண்டுமென்பது பற்றியும்வற்புறுத்திக்கூறியதோடு அரசியல் கைதிகளை [...]னே விடுதலை செய்ய [...] [வா]ரண்டுகளை ரத்து செய்ய வேண்டுமென்றும் விளக்கிடும் தீர்மானத்தை அண்ணா அவர்கள் பிரேரேபித்தார்.

பலத்த கைதட்டுதலுக்கிடையே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

——

**பாங்காக்கில் இன்னும் அதிக பத்திரிகைகள்**

பாங்காக் பிப் 7—

1951-ல் பாங்காக்கில் 116 புதிய பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டன, சென்ற நவம்பர், டிசம்பர் மாதங்களில் மட்டும் ஒரு தினசரி 9 வார பத்திரிகை நான்கு இரண்டு வாரத்திற்கு ஒரு முறை வெளிவரும் சஞ்சிகை, ஒரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளிவரும் சஞ்சிகை பிரசுரிக்கப்பபட்டன. இத்துடன் சீன மொழியிலும் ஆறு பத்திரிகைகளும் வெளிவந்தன.

புதிய பத்திரிகை மசோதாவின் கீழ் பத்திரிகை ஆசிரியகள் ஹைஸ்கூல் பரீக்ஷை தேறியிருக்கவேண்டுமாம். இந்த யோக்கியதை இல்லாத ஆசிரியர்கள் சட்டம் நிறைவேறிய 80 நாட்களுக்குள் நீக்கப்பட வேண்டுமென்று சர்க்கார் கூறி கூறியிருக்கின்றனர்.

**சென்னைச்சட்டசபை கம்யூனிஸ்ட் உறுப்பினர் கூட்டம்**

கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்படுள்ள சென்னை சட்டசபை உறுப்பினர்களின் கூட்டம் 11—2—52 காலை 10 மணிக்குச் சென்னையில் நடைபெறுமென்றும், அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் அஜாய் கோஷ் அவர்கள் கலந்து கொள்கிறார்கள் என்றும் அந்தக் கூட்டத்திற்கு இந்த அவசர அழைப்பையேற்று உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்றும் தோழர் ஏ. கே. கோபாலன் அவர்களும் தோழர் பி. ராமமூர்த்தி அவர்களும் வேண்டிக்கொள்கிறார்கள்.

......

**'ஸேல்ஸ்மன்' வேலை பார்க்கும் இளவரசர்**

ரோம், பிப் 7—

பிரிட்டிஷ் கார் கம்பெனி ஒன்று தங்கள் ஸேல்ஸ்மனாக நிகோலஸ் ரொமனோவிடச் ரொமனுப் என்பவரை நியமித்திருக்கிறது இவர்ரஷ்யாவைஆண்ட அரச குடும்பத்தின் சந்ததியைச் சேர்ந்தவராம்.

..........

## டெலிவிஷன் லைசென்ஸ்

**பிரிட்டனில் !50000 பேர்**

லண்டன, பிப் 7...

பிரிட்டனில் லைசென்ஸ் பெருமல் டெலிவிஷனை உபயோகிப்பவர்கள் எண்ணிக்கை சுமார் 1500000 பேர் எனத் தெரிகிறது.

## புது ராணியிடம் ஸ்தானீகர்கள் அத்தாட்சி

**துக்கக் காலம் நிர்ணயிக்கப்படும்**

பட்ட[ம்] ஏற்கும் [பி]ரகடன தி[ல் இ]ந்தியா கையெழுத்திட்ட[து]

லண்டன், பிப். 7—

இரண்டாவது எலிஸபெத் மகாராணி பதவி ஏற்பு பிரகடனம் செய்யப்பட்டதும் எல்லா நாடுகளின் ஸ்தானீகர்களும் அத்தாட்சி பத்திரங்களை ராணியிடம் சமர்ப்பிப்பர்.

எலிஸபெத்தின் குமாரன் சார்லஸ் பட்டத்துவாரிஸாக ஆகி விட்டான்.

மன்னர் பிரிவுக்குத் துக்கம் காக்கும் காலம் இனிதான் நிர்ணயிக்கப்படவிருக்கிறது. இதுவரை 9 மாதம் காலம் துக்கம் கொண்டாடுவதுதான் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

மன்னரின் மரணத்தினால் ஏற்பட்டுள்ள பெரும் அதிர்ச்சியை இங்குள்ள இந்தியர்களும் பகிர்ந்துக் கொண்டனர்மன்னர்இறந்த செய்தி ஐந்தே நிமிஷங்களில் எங்கும் பரவியது.

மன்னர் மாண்டசெய்தி இந்தியர் ஹவுஸிற்குத் கிடைத்ததும் இந்திய ஹைகமிஷனர் கிருஷ்ண மேனன் காமன்வெல்த் உறவு ஆபீசிற்குச் சென்று துக்கத்தை தெரிவித்துக் கொண்டார்;

புது ராணியை அங்கீகரிக்கும் அக்ஸெஷன் கௌன்ஸில் கூட்டத்தில் இந்திய பாகிஸ்தான் ஹைகமிஷனர்களும் பிரசன்னமாக இருந்தனர் அந்தப் பிரகடனத்தில் இந்திய ஹைகமிஷனரும் கையெழுத்திட்டார்.

## பணம் வாங்கும் லேவாதேவி ஸ்தாபனம்

....

**பாரிஸில் ஏற்படுத்தப்படும்**

நாகரீகத்திலேயே மூழ்கி[...] [...]காரர்களும் (கூச்சமில்லாம[ல்]) தாராளமாகத் தங்களிடமுள்ள பொருள்களை வைத்துப் பணம் பெற்றுச் செல்வதற்கான லேவாதேவி ஸ்தாபனம் மிக நாகரிக முறையில் பிரெஞ்சுச் சாக்காரினால் நடத்தப்பட விருக்கிறது.

இபபோது சாதாணமாக நடத்தபபடும் லேவாதேவிக் கடைகள் நஷ்டத்தில் வேலை செய்கின்றனவாம். இதற்குக்காரணம் பெரிய பணக்காரர்கள் இந்தக் கடைகளுக்கு வர வெட்கபபடுவதேயாகும்.

நிதி இலாகா டைரக்டர் ஜெனரல் ஜோஸப் ஸபேடியர் கூறுகையில் எவ்வளவோ பேர் வெளிக்குப் பணக்காரர்களாக தோன்றியபோதும் அவர்களுக்குப் பாங்கியில் பணம் இருப்பு மிகக்குறைவுதான்.

வருஷத்தில் 300 000 பாரிஸ் வாசிகள் லேவாதேவிக் கடைகளுக்குச் சென்று பணம் பெறுகின்றனர்.

.........

**குழந்தைகள் பற்கள் வளர**

......

**'காரட்' கிழங்கு நல்லது!**

லண்டன், பிப் 7—

மான் செஸ்டர் சர்வகலாசாலையைச் சேர்ந்த புரபஸர் ஈ. மாத்யூஸ் என்ற பல் நிபுணர் குழந்தைகள் இரவில் உறங்குவதற்கு முன்பு ஒரு துண்டு காரட் அல்லது ஆபபில் கொடுத்தால் பற்கள் நன்றாக வளரும் என்று கூறுகிறார். பிஸ்கோத்துகள், பால் இதைக் காட்டிலும் இது சிறந்த உணவு எனறு இவர் மேலும் கூறியுள்ளார். சென்ற ஐந்து ஆண்டுகளாகக் குழந்தைகளின் பற்கள் எப்படி சொத்தை ஆகின்றது என்பதைக் குறித்து இவர் ஆராய்ச்சி செய்து வருகிறார்.

**உதவி ஆசிரியர் தேவை**

தினசரிப் பத்திரிகையில் நல்ல அனுபவமும், தமிழ், ஆங்கிலத்தில பயிற்சியும் உடைய உதவி ஆசிரியர் தேவை. நேரில் விண்ணப்பித்துக்கொள்ளவும்

மாலை மணி

மண்ணடி சென்னை-1

# ஆட்சியாளருக்கு தி. மு. க. எச

## ஜப்பானில் மீண்டும் வில்வித்தை

......

**பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படும்**

டோகியோ, பிப் 7—

ஜப்பானில் வில்வித்தை மீண்டும் தலைதூக்க ஆரம்பித்திருக்கிறது. பள்ளிக்கூடங்களில் இவ்வித்தை கற்பிக்கப்படுமாம். கத்திச் சண்டை போதனையும் ஏற்படுத்தப்பட விருக்கிறது. இவை ஜப்பான் யுத்தத்தில் தோல்வியடைவதற்கு முன் கற்றுக்கொடுக்கப்பட்டு வந்ததுதானும்.

**பிரிட்டனில் லக்ஷாதிபிரபுக்கள் குறைந்து வருகின்றனர்**

லண்டன், பிப் 7—

ஒரு வருஷத்தில் 100000 பவுன் வருமானம் மேல் பெறும் தனவந்தர்களின் எண்ணிக்கை இப்பொழுது குறைந்து கொண்டே வருகிறது. 1950-ல் 49 பேர்கள் இருந்தனர்; சென்ற வருஷம் 39 பேர்கள் இருந்ததாககணக்கிடப்பட்டுள்ளது.

சென்ற வருஷத்தியபணககாரர்களில் முதல்ஸ்தானம் வகிப்பவர் ஸர் ஜான்ரீவ்ஸ் எல்லா மான் என்பவர் இவர் கப்பல் தொழில் முதலாளி இவருடைய சொத்து மட்டும் ரூ 53,00,00,000.

பிரிட்டனில் 60 பேர்கள் மட்டும் வருமான வரி கட்டிய பிறகு வருஷத்திற்கு 6000 பவுன்பெறுகின்றனர் ஒரு வாரத்தில் 5 ரிருந்து 10 பவுன் சம்பாதிக்கின்றவர்கள் மட்டும 9,290,000

## பிரிட்டனில் இன ஒற்றுமைச்சங்கம்

**அட்லி சகோதரி அமைக்கிறர்**

லண்டன் பிப், 7—

மாஜி தொழிற்கட்சிப் பிரதமர் அட்லியின் 77 வயது சகோதரி இன ஒற்றுமைச் சங்கம் ஒன்றை, ஒருஇனபாகுபாட்டால் ஏற்படும் தீமைகளைப் பொதுஜன கவனத்துக்குக் கொண்டுவரும் நோக்கத்துடனும் ஆரம்பித்துள்ளார்.

இந்தியர், ஆப்பிரிக்கர், மலேயர், மேற்கிந்தியர் ஆகிய பல இனங்களை சேர்ந்து 1500 பேர் நேற்றைய பொதுக்கூட்டத்துக்கு வந்திருந்தனர். சர்ச்சில் அனுப்பியுள்ள செய்தியில் உலகமெங்கிலும் இனங்களிடையே ஒற்றுமை நீடிக்கச்செய்ய அனுபவ சாத்யமான நடவடிக்கைகள் 'எடுப்பதை ஆமோதிப்பதாகக் கூறியுள்ளார்.

## ஜாப் சமாதான ஒப்பந்தம்

**அமெரிக்கச் செனேட் கமிட்டி அங்கீகாரம்**

வாஷிங்டன் பிப், 7—

ஜப்பானிய சமாதான ஒப்பந்தத்தைஅமெரிக்கச்செனேட்டின் அயல்நாட்டு விவகாரக் கமிட்டி இன்று ஏகமனதாக அங்கீகரித்தது ஜப்பானுடனும், பிலிப்பைனுடனும், ஆஸ்திரேலியா நியூஜிலாந்துடனும் அமெரிக்கா செய்துகொண்ட ராணுவ ஒப்பந்தங்களும் அங்கீகரிக்கப்பட்டன இனி செனேட்சபைக்கு (மேல்சபை) இவை அனுப்பப்படும்

## நேருவின் தங்கை வெற்றி

**ஆஜாதும் வென்றர்**

லட்சுமணபுரி பிப், 7—

விஞ்ஞான ஆராய்ச்சிப் பகுதியின் மத்திய அரசாங்க மந்திரி [illegible] மத்திய பிரதேசத்திலிருந்தும், தற்காப்பு இலாக்காவின் மத்திய அரசாங்க மந்திரி பலதேவ் சிங் பஞ்சாபிலிருந்தும், நேருவின் தங்கை விஜயலட்சுமி பண்டிட் லட்சுமணபுரியிலிருந்தும் கல்விஇலாக்காவின் மத்திய அரசாங்க மந்திரி மௌலானு அபுல்கலாம் ஆஜாத் காம்பூர் பகுதியிலிருந்தும் மத்திய பார்லிமெண்ட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# இலட்சியவாதிகட்கு வணக்கம் செலுத்துகிறேம்

## அண்ணு விடுத்திட்ட செய்தி

காஞ்சிபுரத்தில் பிப்ரவரி 3-ம் நாள் நடைபெற்ற 'அரசியல் கைதிகள் விடுதலை தினத்'தில் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணு அவர்கள் விடுத்த செய்தியைக் கூட்டத்தில் படிக்கப்பட்டது. அது வருமாறு;

நாலாண்டுகளாக நாட்டிலே காட்டாட்சி நடத்தி வந்த காங்கிரஸ் பாசிசக் கட்சியைப் பொது மக்கள் தேர்தலிலே தோற்கடித்து காட்டிவிட்டனர் ஆளும் தகுதியும் உரிமையும் காங்கிரசுக்குக் கிடையாது என்பது தான் பொது மக்களின் தீர்ப்பு.

காங்கிரசின் இந்தப் பெருந் தோல்விக்குக் காரணம் கடந்த நாலாண்டுகளாகக் காங்கிரஸ் கட்சி அவிழ்த்துவிட்ட அடக்குமுறை வெறிதான்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் ஒரு நூற்றுண்டுக் காலத்திலே எவ்வளவு கொடுமைகளைக் குவித்ததோ அதை விட அதிகமான அளவுக்கு இந்த நாலாண்டுகளில் காங்கிரசாட்சி கொடுமைகளை இழைத்திருக்கிறது. இந்தக் கொடுமைக்கு அதிகமான அளவுக்கு ஆளானவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியினர்.

தூக்குமேடை ஏறினர் சிலர்-துப்பாக்கிக்கு இரையாயினர் பலர்.

மனித மிருகங்கள் மக்களாட்சி மலரக்கூடாது என்[illegible] இல[illegible] சித்த கொடுமையை மனிதாபிமானம் படைத்த எவரும் சகித்துக் கொள்ள முடியாது. பொதுமக்கள் இதனுலேதான் காங்கிரசாட்சியைப் பிடரியைப் பிடித்துத் தள்ளி யிருக்கிறர்கள். எனினும் வெட்கமின்றி காங்கிரசார் பதவியில் ஒட்டிக் கொண்டும், பிணபரிசோதனை நடத்திக் கொண்டும், கொல்லைப்புற வழிகளைத் தேடிக் கொண்டும் அரசியல் விபசாரர்களைத் தேடி அலைந்து கொண்டும் இருக்கிறர்கள்.

இந்தக் கண்ருவிக் காட்சி ஒருபுறம், இதேபோது இலட்சியவாதிகள் இன்னும் இம்சைக்கு ஆளாக்கப்பட்டு வருகிறர்கள். பொது மக்களின் பிரதிநிதிகள் போக்கிட மற்றவர்களால் சிறையிலே தள்ளி வைக்கப்பட்டுள்ளனர்.

பொதுஜன விரோதிகள் என்று பொமக்கள் தேர்தல் கோர்ட்டிலே யாருக்குத் தீர்ப்பையளித்து விட்டனரோ அந்தக் குற்றவாளிகளாம், காங்கிரஸ் ஆட்சியினர். பொது மக்களின் பிரதிநிதிகளைச் சிறையிலே பூட்டி வைத்திருப்பதும் அவர்களிலே பலர் மீது வழக்கு தொடுத்திருப்பதும் வாரண்டுகளை ஏவுவதும், ஜனநாயக நாட்டிலே, வாழும் எல்லா முற்போக்குக் கட்சிகளையும், கருத்தினரையும், கேவலப்படுத்தும் வெறிச் செயலாகும்.

இந்த வெறிச்செயலை நாடு கண்டிக்கிறது. முற்போக்காளர் அனைவரும், அவர்கள் எந்த முகா[illegible]ல் இருப்பினும் கண்டிக்[illegible]

இலட்சியவாதிகள் வி[illegible] தலைப் பெற வேண்டும். வழக்குகளும் வாரண்டுகளும் ரத்தாக வேண்டும். மக்களிடமிருந்து, மக்களின் பிரதிநிதிகளை பிரித்து வைக்கும் அரசியல் அக்ரமத்தை நாம் அனைவரும் எதிர்த்து ஒழித்தாக வேண்டும்.

ஜனநாயகத்தை பழிப்பதாகப் பறைசாற்றிக் கொள்ளும் காங்கிரசாட்சியின், பாசிச வெறியை நாடறியச் செய்வோம், உலகறியச் செய்வோம்.

பார்மோசா (Formosa) தேடிடும் நிலைக்கு வந்துள்ள காங்கிரஸ் கட்சி இனியும் பொது மக்களின் ஆத்திரத்தைக் கிளப்பாமலிருக்கும்படி, நல்லறிவாளர்கள், காங்கிரசுக்குப் புத்தி புகட்ட வேண்டும்.

பொதுமக்களின் ஒருமித்த கருத்து திரண்டெழ இந்த நாள் பயன்படுமாக இந்தச் சிறிய முயற்சியில் தி. மு. க. வின் ஒத்துழைப்பு, நிச்சயமாக உண்டு என்பதை இந்தச் செய்தி மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கொள்கைக்காகக் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டிருக்கும், இலட்சிய வாதிகளுக்கு வணக்கம் செலுத்திக்கொள்ளுகிறது தி.மு.க.

கொடுமை புரியும் ஆட்சியாளருக்குத் தி. மு. க. எச்சரிக்கை செய்கிறது.

அரசியல் கைதிகள் விடுதலை பெற வேண்டும், அக்ரம ஆட்சி அகலவேண்டும்; அகற்றப்பட வேண்டும். வாழ்க ஜனநாயகம். வீழ்க பாசிசம்.

## எகிப்தில் சமரசம் ஏற்படுத்த

......

**பிரிட்டிஷாரின் ஆவல்**

லண்டன் பிப் 5—

எகிப்தின் தேசிய அபிலாஷைகளைக் கருத்தில்கொண்டு பைசல் காண்பதற்காக எகிப்துடன்நேரடியாகப் பேச்சு நடத்தப் பிரிட்டன் விரும்புவதாகப் பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி ஈடன் இன்று கூறினர். சூயஸ் பகுதி மத்திய கிழக்குப் பிரதேசம் ஆகியவற்றின் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கூறினர்.

சமரசப் பேச்சு நடத்த எகிப்தும் தயாராகாதம் பிரிட்டிஷ் அதிகாரிகள் நம்புகின்றனர் பிரிட்டனும் எகிப்தும் கூடிப் பேசுவதற்கு அமெரிக்காவும் தீவிர முயற்சி செய்வதாகத் தெரிகிறது.

இஸ்மைலியா பிப் 6- சூயஸ் பிரதேசத்தில சிவிலியன் போக்கு வரத்து சம்பந்தமாக விதிக்கப்பட்ம் தடைகளைப் பிரிட்டிஷ் ராணுவத்தினர் தளர்த்தினர் சூயஸ் நிலைமைப் பற்றி எகிப்திய பிரதமர் மெஹர் பாஷா சூயஸ் கவர்னருடன் ஆலோசனை நடத்தினர். இதைத் தொடர்ந்து சூயஸ் நிலைமை மேலும் அபிவிருத்தியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சூயஸ் பகுதிக்கு அடையாள பூர்வமாக அமெரிக்காவும் பிரான்சும் படையனுப்ப வேண்டும் என சர்ச்சில் சமீபத்தில் கூறியதை இன்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு தொழிற் கட்சி மெம்பர் கண்டித்தார், மத்ய கிழக்குப் பாதுகாப்பில் பிற நாடுகளும் பங்குகொள்ள வேண்டும் என்ற எண்ணத்திலேயே தாம் அவ்வாறு கூறியதாகச் சர்ச்சில் விளக்கினர்,

## ஆஸ்திரேலியாவில் அரிசி உற்பத்தி

லண்டன் பிப் 7—

ஆஸ்டிரேலியாவில் அரிசி உற்பத்தியை அதிகரிப்பதற்கான யோசனைகள் இருந்துவருவதாகத் தெரிகிறது வடக்கு பாகத்தில் கிம்பர்லி ஜில்லாவிலும் டார்வின் காதைரன் பகுதியிலும் இயற்கை நீர்ப்பாசன வசதியுடன் ஏராளமான அரிசி உற்பத்தி செய்ய முடியுமென்பது தெரிகிறது.

## பொத்தானை அழுத்தினுல் பறக்கும் விமானம்!

............

**விஞ்ஞானத்தின் அரிய சாதனை**

லண்டன். பிப் 7—

விமான ஓட்டிக்கு வருங் காலத்தில் மிக எளிதான வேலை தான் இருக்குமென்றும், இப்பொழுது போல் இருமல் பொத்தானை அழுத்திய உடன் பறக்கும் விமானத்தை கண்டு பிடிக்கப்படும் என்றும் இங்கு கூறுப்படுகிறது.

இவ்விதமான 'விமானங்கள் டிஸைன் செய்யும் என்ஜீனியர்கள் இவைகளின் வேகத்தையும், அளவையும் அதிகரிக்க வேண்டும் என்ற பிரசனை மிகக்கடுமையாக பாதிக்கும் என்றும் கூறப்படுகிறது.

......

## திருடர்களுக்குப் புதிராய் விளங்கும் பூட்டு

லண்டன் பிப். 6—

அதகப் பணச்செலவில் 1873ல் செய்யப்பட்ட ஒரு பூட்டு திருடர்களுக்குப் பெரும புதிராக இன்றும் விளங்குகின்றது என்று ராயல் கலைச்சங்கத்தில் பேசும் பொழுது ஜார்ஜ் ஸி ஹெச் ஜப் என்ற திருடர்கள் உடைக்க முடியாத பூட்டுகள் தயாரிக்கும் நிபுணர் கூறினர்.

சுமார் 80 வருஷங்களுக்கு முன்பு செய்யப்பட்ட இக்கெடிகாரத்தில் அனேக இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இது திறந்துகொள்ளும் என்றும் அப்பொழுதுதான் இரும்புப் பெட்டியை திறப்பது சாத்யமென்றும் கூறப்படுகிறது

## இரட்டை பெண் குழந்தைகள்!

போடி, பிப் 6—

இவ்வூரில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் ஒருவரின் மனைவி முத்து நாகம்மாளுக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன 2 குழந்தைகளும் மார்போடு ஒட்டியிருக்கின்றன குழந்தைகள் இறந்தே பிறந்தன அந்தப் பெண்ணுக்கு வயது 21 என்றும், இது மூன்ருவது பிரசவம் என்றும் சொல்லப்படுகிறது குழந்தையை நகரசபை ஆஸ்பத்திரியில் வைத்திருக்கிறர்கள்.

## பொதுத் தேர்தலுக்கு ரூ 10 கோடி செலவு

**ஜாமீன் இழந்தவர்கள் மூலம் ரூ 11 லட்சம் வருமானம்**

புது டில்லி, பிப் 4—

சென்ற அக்டோபர் மாதம் இந்தியா பூராவிலும் வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் முதன் முதலாக ஆரம்பமான பொதுத்தேர்தல் நடத்தப்பட்ட விதம் தமக்குத் திருப்தி அளிப்பதாகப் பிரதமத் தேர்தல் கமிஷனர் சுகுமார் சென் இன்று செய்தி நிருபர் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இன்னமும் தேர்தல் முடிந்தபாடில்லை என்றும் உத்தரப் பிரதேசத்தில் மலைப் பிரதேசங்களில் இன்னும் தேர்தல் நடைபெற வேண்டியிருப்பதாயும் கௌன்சில்களுக்கும். ராஜாங்க சபைகளுக்கும், தேர்தல் நடைபெற வேண்டுமென்றும் ஏப்ரல் இறுதி அல்லது மே ஆரம்பத்தில் தேர்தல் முடிந்துவிடும் என்றும் சுகுமார் சென் மேலும் கூறினர்.

வயது வந்தோர் அனைவருக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டு நடத்தப்பட்ட இத் தேர்தலில் பலவித இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் இவை அனைத்தும் வெற்றிகரமாகச் சமாளிக்கப்பட்டதாயும் அவர் தெரிவித்தார்.

பெண் வாக்காளர்களில் 20 சத விகிதத்தினரே ஓட் செய்வர் எனும் மதிப்பீடும் பொய்யாக்கப்பட்டது. உண்மையில் ஆடவரை விட மாதர்களே அதிகமாக வாக்களித்துள்ளனர். நகரங்களில் வாக்காளர் 40 சதவீதமும் கிராமப் பகுதிகளில் 60 சதவிகிதமும் வாக்களித்தனர். ஒழுங்காக முறை பிசகாது கியூவரிசையில் நின்று மக்கள் வாக்களித்து விட்டுச் சென்றது பிரமிக்க வைக்கக் கூடிய நிகழ்ச்சி பலவிடங்களில் கொள்ளையர்களால் தொல்லையேற்படுமென்ற பயமிருந்தது ஆனல் மொத்தம் நாட்டில் 225 ஆயிரம் ஓட்டுச் சாவடிகளில் 6-ல் தான் ஓட்டெடுப்பை ஒத்தி வைக்க நேர்ந்தது இவையனைத்தையும் நோக்குங்கால் இந்திய வாக்காளர் மகா ஜனங்கள் அரசியல் துறையில் முதிர்ந்தவர்களே யென நிரூபிக்கப்பட்டுள்ளதாக சென் கூறினர்.

கெடு தேதிக்குப் பிறகு வாக்காளராகப் பதிவு செய்து கொள்ள 50 ரூபாய் அபராதம் செலுத்தி 757 பேர் விண்ணப்பித்தனர் அவர்களில்பலர்அபேட்சகர்கள் இதனுல் சர்க்காருக்கு 40 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைத்தது விண்ணப்பங்களில் 48 நிராகரிக்கப்பட்டன. 33 பற்றி முடிவுகூறவேண்டும்மேற்படி விண்ணப்பதாரர்களில் 8 பேர் பார்லிமெண்டுக்கும், 48 பேர் ராஜ்ய அசெம்பிளிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**தொகுதி நிர்ணயம் சரியல்ல**

தற்போதைய தொகுதிகளை நிர்ணயிக்க 8 மாதம் பிடித்தது இதை இரண்டு அல்லது மூன்று மாதங்களில் செய்திருக்கலாம் சில விடங்களில் குறைகளும் காணப்பட்டன தறபோதைய தொகுதிகள் பிரிவினை 1953 ஜனவரி வரையில்தான் அமுலில் இருக்கும் அதன் பிறகு அவற்றை ஆதாரவாகக் கொண்டு உபதேர்தல் நடத்தலாமேவொழிய பொதுத் தேர்தல் நடத்த முடியாது, கடைசியாக வந்துள்ள ஜனகணிதைகளின் நிலவரங்களைக் கவனித்தால் பார்லிமெண்ட் தொகுதிகளைக்கூட மாற்றியமைக்க வேண்டியிருக்கும் ஆக ஓராண்டுக்குள் இவ்வேலையை மறுபடி செய்ய வேண்டும் ஓட்டுச் சாவடிகளை அடிப்படையாகக் கொண்டு தொகுதிகளைப் பிரிப்பதையே தாம் சரியானதெனக் கருதுவதாயும் அவர் உரைத்தார்.

**ஜாமீன் இழந்தோரால் ரூ. 11 லட்சம் வருமானம்**

ஜனவரி 29-ந் தேதி வரை தொகுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் பிரகாரம் தேர்தலில் ஜாமீனைப்பறி கொடுத்த அபேட்சகர்கள் சர்க்கார் வருமானத்தை 11 லட்ச ரூபாய் அதிகரித்து உள்ளனர். ராஜ்ய மத்திய ஸ்தானங்கள் 3862-கரு 1,459 அபேட்சகர்கள் போட்டியிட்டனர்.

ஆண்களைவிட ஸ்திரீகளுக்கே அதிக ஓட்டுகள் கிடைத்தன ஆனல் ஸ்தானங்கள் கைப்பற்றுவதில் அவர்கள் ஆண்களுக்குச் சளைத்தவர்களே பார்லிமெண்டுக்குப் போட்டியிட்ட 44 ஸ்திரீகளில் 10 பேரும் ராஜ்ய அசெம்பிளிகளுக்கு நின்ற 96 பேரில் 49 பேரும இதுவரை வெற்றி பெற்றுள்ளனர்.

சமஸ்தான அதிபர்களில் பிலாஸ்பூர் பீகானீரி மகாராஜாக்கள் பாரலிமெண்டுக்கும காலஞ்சென்ற ஜோத்பூர் அதிபர் உள்பட 14 பேர் அசெம்பிளிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் இவர்களில்6 பேருக்குக்காங்கிரசு அபேட்சை கிடைத்தது. தற்போதைப்போல் அல்லாது இனி அவ[illegible]

பொதுத் தேர்தல்களை இரண்டே மாதங்களில் முடிக்கவேண்டுமெனவும் அவர் அபிப்பிராயப்பட்டார்.

இதுவரை 6 தேர்தல் ஆட்சேப மனுக்களே வந்திருப்பதாகவும் மார்ச் மாதத்திற்குள் ஆயிரக்கணக்கில் வருமென எதிர்பார்ப்பதாயும் கூடிய சீக்கிரம் டிரிபூனல்கள் நிறுவப்ப[illegible] மெனறும் வழக்குகளைத்[illegible] மாகப பைசல் செய்ய[illegible] சாட்சிகள் எ[illegible] கட்டுப்படுத்த[illegible] காரம

## கொரியா பற்றி ஈடன்

**சர்ச்சில் பேச்சுக்கு அட்லி கண்டனம்**

லண்டன், பிப். 7—

கொரியா சம்பந்தமாகப் புதிய நடவடிக்கை எதற்கும் அமெரிக்காவிடம் பிரதமர் சர்ச்சில் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை என்று அயல்நாட்டு மந்திரி ஈடன் இன்று காமன்ஸ் சபையில் உறுதிகூறினர் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு அதைக் கம்யூனிஸ்டுகள் மீறினல் பிரிட்டன் முதலிய நேச நாடுகள் கூடி ஆலோசிக்க வேண்டும் என்று மாத்திரம் ஒப்புக் கொள்ளப்பட்டதாக அவர் சொன்னர்.

அயல்நாட்டு விவகாரம்பற்றிய விவாதத்தைத்தொடங்கிவைத்து ஈடன் இவ்வாறு பேசினர். யுத்த பயம் முன்னைவிடக் குறைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பர்மாவில் சியாங்-கே ஷேக்கின் துருப்புகள் இருப்பதை ஈடன் குறிப்பிட்டு ஐ நா ஒரு கமிஷனை அங்கு அனுப்பி விசாரிக்கலாம் என்று யோசனை கூறினர்.

தூரகிழக்கு நிலைமை பற்றி அமெரிக்கச் சட்டசபையில் சர்ச்சில் பேசிய தோரணையை எதிர்க் கட்சித் தலைவர் அட்லி கண்டித்தார். கொரியா சம்பந்தமாகப் பிரிட்டிஷ் கொள்கை மாறிவிட்டது என்ன பொருள்படும் ரீதியில் அமெரிக்காவில் சர்ச்சில் பேசியதாகவும் பிரிட்டனுக்குத் திரும்பியபின் கொள்கை மாறவில்லை என்று அவர் கூறுவதாகவும் அட்லி குறிப்பிட்டார்.

பார்மோஸாவில் உள்ள சியாங் கே-ஷேக் கோஷ்டியைக் கம்யூனிஸ்டுகள் படுகொலை செய்யவிடக்கூடாது என்று சர்ச்சில் கூறியது சியாங் சர்க்காரைஅவர் ஆதரிப்பதாகப்பொருள்படுகிறது என்று அட்லி சொன்னர் பார்மோஸாவைப் பல வருஷங்களுக்கு நடுநிலைமைப் பிரதேசமாக வைத்திருக்க வேண்டும் என்றும் கொரியா போர் வெளியே பரவக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார். கம்யூனிஸ்ட் சீனவுடன் போட்டிப் போட வேண்டும் என சில அமெரிக்கர் கூறுவதை ஆதரிக்கக் கூடாது என்று அட்லி வற்புறுத்தினர்.

எகிப்தில் நிலைமை அபிவிருத்தியடைந்திருப்பதாகவும்; ஈரான் நிலைமையும் அபிவிருத்தியடையும் என நம்புவதாகவும் அட்லி சொன்னர் ஜெர்மனி சொந்தமாக ராணுவம் வைத்துக் கொள்ளக் கூடாது என்று அவர் கூறினர்.

## காஷ்மீருக்குப் புதிய கொடி

**அரசியல் நிர்ணய சபை அங்கீகரிக்கும்**

ஜம்மு, பிப். 5—

காஷ்மீர் அரசியல் நிர்ணய சபையின் அடுத்த கூட்டத்தில் புதிய சர்க்கார் கொடி ஒன்று அங்கீகரிக்கப்படும் என்று தெரிகிறது. மஞ்சள். சிகப்பு வர்ணமுள்ள தற்போதுள்ள மன்னர் குடும்பக் கொடிக்குப் பதிலாக இப்புதிய கொடி ஏற்றுக்கொள்ளப்படும். தற்போதுள்ள தேசீய மகாநாடு கட்சிக் கொடியைப் போலவே இப்புதிய கொடி அமைக்கப்படுமாம். சிகப்பு வர்ணத்துடன் கூடிய இக்கொடியில் வெள்ளை நிறத்தில் கலப்பையும மூன்று கலாசார பிராந்தியங்களான காஷ்மீர், நாடக, ஜம்முவைக் குறிக்க மூன்று செங்குத்துக் கோடுகளும் பொறிக்கப்பட்டிருக்கும்.

## கூட்டு[illegible] நாள் கொ[illegible]

**கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை**

இம்மாதம் 12-ம் தேதி, காங்கிரசல்லாத எம். எல். ஏக்களின் மகாநாட்டைக் கூட்டுவதற்காக, கம்யூனிஸ்ட் கட்சி, பிரஜா கட்சி, உழைப்பாளி கட்சிஆகியவற்றின் தலைவர்களும் பிரபல சுயேச்சையாளரும் முன் முயற்சி எடுத்து அழைப்பு அனுப்பியுள்ளதாகவும் குறைந்த பட்ச திட்டத்தின் அடிப்படையில், மக்களுக்கு உடனடியாகக் கஷ்ட நிவாரணம் அளிக்கக்கூடிய மந்திரிசபையை அமைப்பதற்காகக் 'காங்கிரஸல்லாத எம். எல். ஏ.க்கள் ஒன்றுபட வேண்டுமென்ற கோரிக்கைக்குள்ள பொதுஜன ஆதரவைப் பிரகடனம் செய்யும் முறையில் பிப்ரவரி 10-ம் தேதியைக் கூட்டுசர்க்கார் நாளாகக் கொண்டாட வேண்டுமென்று நாம் சகலமுற்போக்குக் கட்சிகளையும் முற்போக்காளரையும் கேட்டுக் கொள்வதாகவும். அட்வைஸரி ஆட்சி ஏற்படுவதை அனுமதிக்க மாட்டோமென்றும், புதிய சட்டசபை உடனே கூடவேண்டுமென்றும், முற்போக்கு மந்திரிசபை அமைப்போமென்றும் நாடெங்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆர்ப்பாட்டங்கள் நடத்தித் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்வதாகவும்.

பிப்ரவரி 12-ல் நடைபெறும் மகாநாட்டிற்கு உற்சாக மளிக்க வேண்டுமென்பதாகவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு கமிட்டி அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

## "ஒழுக்கம் குறைவுதான்"

**நீதிபதி வெளியிட்ட கருத்துக்கு நகர கௌன்ஸில் [illegible]**

[illegible]—

நோர்ஹா[illegible]ண்டியைச் சேர்ந்த மே[illegible] ஹார்டில்பூல் என்கிற சிறு நகரில் ஒரு விவாகரத்து வழக்கை விசாரித்த நீதிபதி நாட்டின் இதர இடங்களிலுள்ளதை விட இந்நகர் மக்களுக்கு ஓரளவு ஒழுக்கம் குறைவுதான் என்கிற கருத்தை வெளியிட்டார்.

இதை அந்நகரவாசிகள் 12000 பேர்களும் ஆட்சேபித்தனர் நகரக் கௌன்சில் இம்மாதிரி அபிப்பிராயம் வெளியிடுவது நீதிபதியின் கடமையோ அல்லது உரிமையோ இல்லை என்றும் இதனுல் நகரத்தின் மதிப்பே போய்விடும் என்றும் முக்யமாக கைத்தொழில் அபிவிருத்தி பாதிக்கப்பட்டுவிடும் என்றும் எழுதியிருக்கிறது.

இந்த ஆட்சேபக் குறிப்பின் பிரதியொன்று லார்ட் சான்ஸலருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## உணவு தரம் உயர வேண்டும்

**ஐ. நா. நிபுணர் யோசனை**

பம்பாய், பிப் 7—

ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபன கோஷ்டி உத்தர பிரதேசத்தில் விவசாயம் நடைபெறுவதைப் பரிசீலனை செய்ததாகவும், உணவுப் பொருள் உற்பத்தியை பெருக்கவும் தரத்தை உயர்த்தவும் சில யோசனைகளைத் தெரிவித்திருப்பதாகவும் அக்கோஷ்டியின் தலைவரும் பிரிட்டிஷ் தாவர நிபுணருமான டாக்டர் ஆர். டி. ஓயிட் கூறினர்.

இக்கோஷ்டியில் 6 நிபுணர்கள் உள்ளனர். இந்திய சர்க்கார் அழைப்பின் பேரில் இக்கோஷ்டி மூன்று மாதத்திற்கு முன் இந்தியா வந்தது.

கால்நடைகளுக்கான தீவன உற்பத்தியை போதுமான அளவில் போதிய தரத்தில் செய்வது என்பது சாத்யமில்லாமலிருக்கிறது என்றும் இந்தியா[illegible] வுள்ள மேய்ச்சல் [illegible] நன்கு பயன்பட[illegible] வேண்டிய[illegible] ஓயி[illegible]

...ப்பு
...பணி

... முன்னேற்றக் கழக ...ளர் சேர்க்கும பணியைத் தீவிர ...டிக்க கீழ்க்கண்டுள்ள நிகழ்ச்சியின்படி ...முழுவிவரங்களை அந்தந்த சம்பந்தப்பட்ட ...ளா விளம்பரப்படுத்துவார்கள், எனவே பொது ...(வட்டு அனு உறுப்பினர் கட்டணத்துடன்) ஏராளமாக ...ந்து பேராதரவுதர வேண்டுகிறோம்.

12—2—52 செவ்வாய் மாலை 6-மணி 1 முதல் 5-வட்டம் வரை (வடசென்னை)

13—2—52 புதன் மாலை 6-மணி 6-முதல் 12-வட்டங்கள்

14—2—52 வியாழன் மாலை 6-மணி மேற்குசென்னைக்கிளைகள்

15—2—52 வெள்ளி மாலை 6-மணி தென் சென்னை, (திருவல்லிக்கேணி, இராயப் பேட்டை, மயிலை உட்பட)

16—2—52 சனி மாலை 6-ணி (சிந்தாதிரிப்பேட்டை, பெரிய மெட்டு, ஆயிரம் விளக்கு, நுங்கம்பாக்கம், சைதை,

மேற்கண்ட உறுப்பினர் சேர்க்கும் நிகழ்ச்சிகளி மாவட்டச்செயலாளர் தோழர் என். வி. நடரர்சனும், மற்ற துணைச் செயலாளர்களும் முன்நின்று பணியாற்றுவர்.

சென்னை மாவட்ட தி. மு. கழகம்.

# தென்னாடு, காங்கிரசுக்குப் பிணக்குழி தோண்டியது

## திராவிடம் உல அரங்கிலே மின்னுகிறது

### நாட்டு மக்களின் நலமே எனது மூச்சு

**தோழர் ராமமூர்த்தியின் பேச்சு**

5-2-52 இரவு 1-30 மணிக்கு, நெ. 3, மெயில் வண்டியில் இங்கு வந்த தோழர் ராமமூர்த்திக்கு, கம்யூனிஸ்ட் கட்சியும், தி.மு.க. வும் தி. க. வும் பல ரெயில்வே டிப்பார்ட்மெண்டு ஊழியர்கள் சார்பிலும், மலர்மாலைகள் அணியப்பட்டு, மிட்டாய்கள் வழங்கப்பட்டு வரவேற்றனர் வரவேற்புக்குப் பதில் கூறும்வகையில் தொழிலாளர்கள், பொது மக்கள், ஆசிரியர்கள், ஆகியோர் சுமார் ஆயிரம்பேர் கொண்ட திரளான கூட்டத்தில், திருவாங்கூர், ஆந்திரா முதலிய ஊர்களில் பறந்து, சொல்மாரி பொழிந்து காங்கிரஸ் கொள்கையைப்பற்றி பெருமை அடித்து தம்பட்டம் அடித்தனர். ஆனால் பொதுமக்களோ கழுதையை நிறுத்தினாலும் காங்கிரசே வெற்றி பெறும் என்ற காலம் மலையேறிவிட்டது, சொல் முக்கியமல்ல செயலே முக்கியம் என்று கூறிவிட்டனர். காங்கிரசை தோற்கடித்த தென்னாட்டைப்பற்றி உலகமே பேசிக்கொள்கிறது உங்களுக்கு என் வணக்கமும் நன்றியும்.

மக்களோடு தொடர்பு இல்லாத கட்சி அழிந்துவிடும் என்பதற்குக காங்கிரசே எடுத்துகாட்டாக உள்ளது தி க-தி மு க இன்னும் பல முற்போக்கு ஸ்தாபனத்தின் ஒரு திட்டம் தந்து அதன் மூலம் நாட்டையாளவே முயற்சிக்கிறோம் கம்யூனிஸ்ட் அழிக்கப் பாடுபடுவர் பலர் அழிந்தே போயினர் காரணம் மக்களோடு கம்யூனிஸ்டு தொடர்பு கொண்டுள்ளதாலேயே இவ்வளவு பலம் ஏற்பட்டுள்ளது இந்தியாவில், காங்கிரஸ் அழிவது கண்டு அமெரிக்கப் பத்திரிகையும், பிரிட்டன் பத்திரிகையும் ஒப்பாரி வைக்கின்றன ஆனல் ரஷ்ய சீன பத்திரிக்கைகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றன நீங்கள் கோயங்காவைத் தோற்கடித்தீர்கள் இது மிகவும் வரவேற்கத் தக்கது மக்கள்மீது திணிக்கப்படும் சட்டம் கூடாது, மக்களுக்குத் தேவையான சட்டம் செய்யப்படவேண்டும் ரஷ்யாவிலோ, சீனவிலோ எல்லா பிற்போக்குக் கும்பல் அழிந்துபோய் விட்டது ஆகவே நாம் மேலும் இங்குள்ள பிற்போக்குக் கும்பல் அழியவேண்டும் என்று கூறி முடித்தார்

கூட்டு மந்திரிசபை அமைக்க ஏற்பாடு செய்க!!

தோற்ற மந்திரியே வெளியேறு!!!

என்று கோஷமிட்டு கூட்டம் கலைந்தது.

## தி. மு. கழக நடவடிக்கைகள்

பொன்னேரி — திராவிட முன்னேற்றக் கழக அமைப்பு ஆய்வுக்குழு கூட்டம் 3-2-52 காலை பொன்னேரி ஆர் எஸ் நாடார் அவர்கள் இல்லத்தில் தோழர் எஸ் பாலகுருசாமி எம் பி பி எஸ் அவர்கள் தலைமையில் கூடி, தோழர் எஸ் பாலகுருசாமியைச் செயலாளராகவும் உலகநாதனைப் பொருளாளனாகவும், அரசூர் நடராசன் அவர்களை விளம்பர உறுப்பினராகவும் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா இத்திங்கள் இறுதிக்குள் நடாத்துவதென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது:

செய்யார வட்டம்:— மேல்மட்டை விண்ணமங்கலம் கிராமத்தில் தி மு க ஆரம்ப விழா 2-2-52 தேதியன்று திருவத்திபுரம் தோழர் பு து சனார்தனம் தலைமையில் கூடிய கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் நிறுவப்பட்டது அவ்வமயம் காஞ்சி கல்யாண சுந்தரம், புலவர் கோவிந்தன் அரிய சொற்பொழிவாற்றினர்கள் கீழ்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் ஆர் கோவிந்தராசன் செயலாளர், எஸ் பி ஜான் துணைச்செயலாளர், வி இராமசாமி நிதிக்காப்பாளர் செயற்குழு உறுப்பினர் வி ஏ கிருட்டினன். எஸ் குப்புசாமி எம் என சாமி ம. கந்தசாமி எ அம்மையப்பன் சி அருணசலம் ஆர். சுப்பிரமணியம் டி சுப்பிரமணியம் பி. நன்னே ஜான் பி அப்துல் ரஹீம் பி: தனபால்.

கும்மிடிப் பூண்டியில் 6-2-52 ல் தி. மு. கழகக் கிளைக் கழகம் துவக்கப்பட்டபின் பின் கண்ட நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: திரு இ. எஸ். மணி (தண்டலச்சேரி.) துணைச் செயலாளர் ஏ பெருமாள்,(சிறியஓபுளாபுரம்) விளப்பரச் செயலாளன் டி கேவரதாசன், (பழைய கும்மிடி பூண்டி) பொருளாளன் எஸ் ஆறுமுக நாடார் பழைய கும்மிடி பூண்டி, மற்றும் பதினொரு பேர்களடங்கிய செயற்குழுவும அமைக்கப்பட்டது கழக நோக்கங்களைப்பற்றிய விளக்கத்திற்கு பிறகு திராவிடநாட்டுப்பண்பாட கூட்டம் முடிவுற்றது,

## கல்வி பெருக

நன்கொடையளிப்பு

வாலாஜாபாத்; பிப் 8...

சென்னை அமிஞ்சிக்கரையில் எண்ணெய் வாணிபம் புரிந்து வரும் கே எம் கங்காதர செட்டியார், வேலவம் பி. மு. கோவிந்தராஜ செட்டியார் மைலாப்பூர் டி. மாணிக்கச் செட்டியார் ஆகியோருடன் 3..2...52-ல் வாலாஜாபாத் இந்து மத பாடசாலையின் பல பிரிவுகளையும் மாணவர் இல்லத்தையும் அங்கு மாணவர்கள் பெறும் பயிற்சியையும் தொழிற் சாலையையும் அங்கு மாணவர்களுக்குக் கற்பிக்கும் தொழில்களையும் நேரில் பார்த்து மகிழ்ந்தார்கள்.

பாடசாலையின் கட்டிடநிதிக்கு கே. எம். கங்காதர செட்டியார் தம் தந்தையர் வேலம் முத்துச் செட்டியார் பெயரில் ரு 1000 ம் நன்கொடை அளித்தார்கள்.

## புதிய எம். எல். ஏக்கள் சென்றகாருக்கு விபத்து

இருவ க்குப் பலத்த காயம்

ஜெய்பூர், பிப். 7—

ராஜஸ்தான் மாகாண காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி கான் ஜோஷியும், பிரபல பத்திரிகை ஆசிரியர் அஜாரிலால் ஷர்மாவும் பிரயாணம் செய்த கார் ஜெய்பூர் அருகே விபத்துக்குள்ளாகியதன் விளைவாக அவ்விருவருக்கும் பலத்த காயமேற்பட்டன.

அவர்கள் இருவரும் ராஜஸ்தான் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்கள் சென்ற கார் ஒரு மரத்தின் மீது மோதிக் கொண்டது.

ஜெய்பூா, ஆஸ்பத்திரியில் அவர்கள் இருவரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

## பார்லிமெண்டு தேர்தலில் டாங்கே போட்டி

தெலிங்கானு ... ல் நிற்பார்

... பிப். 7—

ஹைதராபாதில் ... ங்கானு தொகுதியிலிருந்து கம்யூனிஸ்டு தலைவரான எஸ் ஏ. டாங்கே பார்லிமெண்டுக்குப் போட்டியிடுவாரென்று ஹைதராபாத் கம்யூனிஸ்டு தலைவரான ரவிநாராயண ரெட்டி இன்று அறிவித்தார்.

டாங்கே போட்டியிடுவதற்கு வழிசெய்யும் பொருட்டே மக்கள் ஜனநாயக முன்னணி அபேட்சகர் ஒருவர் தமது ஸ்தானத்தைக் காலி செய்வதுபற்றி நாளைய கூட்டத்தில் ஆலோசிக்கப்படுமென்றார் ரெட்டி.

## ஐ. நா. நிருபர்கள் மீது குற்றச்சாட்டு

ஐ. நா. ராணுவ அறிக்கை

டோக்கியோ, பிப். 7—

கம்யூனிஸ்டுகளுடன் அனுவசியமாக ஐ. நா. நிருபர்கள் அதிக தொடர்புகொண்டதாக ஐ. நா. ராணுவ அறிக்கையொன்று குற்றஞ்சாட்டியது, கம்யூனிஸ்டுகளிடமிருந்து அவர்களுடைய போட்டோக்கள்முதலியவைகளை பெற ஐ. நா. நிருபர்கள் கம்யூனிஸ்டுகளுடன் குலாவுகிறார்கள் என்று அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

## சென்னை மாகாண கட்சிகள் நிலை

6-2-52 வரை வருமாறு

| | |
|---|---|
| காங்கிரஸுக்கு | 152 |
| எதிர்க்கட்சிகளுக்கு | 221 |

விபரம்

| கட்சிகள்: | ஸ்தானங்கள்: |
|---|---|
| காங்கிரஸ் | 152 |
| கம்யூனிஸ்டு | 62 |
| மக்கள் கட்சி | 35 |
| சுயேச்சை | 60 |
| ரங்கா கட்சி | 15 |
| ...ஸ் | 1 |
| [illegible] | 13 |
| [illegible] | 5 |
| [illegible] | 6 |

## நீதிமன்றத்திற்கு "முருகக் கடவுள்" வருகை

கடலூர், பிப் 7—

கடலூர், உதவி செஷனஸ் நீதிபதி ஜனுப் மகமத் கௌஸ் உளுந்தூர்ப்பேட்டை போலீசாரால் சேவகன் என்பவன் மீது மேற்படி எதிரியின் மனைவியைக் கொலை செய்ய எத்தனித்ததாக இ பி கோ307பிரிவின் கீழ் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 2 வருடக் கடுங்காவலும் ரூ 100 அபராதமும் வசூலாகும் தொகையில் ரூ. 50 எதிரியின் மனைவிக்குக் கொடுக்கப்படவும் உத்தரவிட்டார்.

வழக்கு விசாரிக்கப்படுகையில் செஷன்ஸ் கோர்ட்டில் எதிரியின் வாக்குமூலம் வாங்கும்தருவாயில் ஆவேசத்துடன் முருகன் முதலான கடவுள்களைப் பற்றிக் கூச்சலிடவே பலரும் பயந்து எதிரியை வெளியே கொண்டு போய் தண்ணீரால் அபிஷேகம், செய்வித்து கற்பூரத்தைக் கொளுத்தித் தீபாராதனை செய்தபோது எதிரி எரியும் கற்பூரத்தைக் கையில் வாங்கி வாயில் போட்டு உட்கொண்டார். இதனால் கோர்ட்டிலேயே பரபரப்பு ஏற்பட்டு பின் கும்பல்கூட ஆரம்பித்து விட்டது. கோர்ட் அலுவல்களும் இரண்டு ... தடைபட்டது எதிரிக்கும் தெளிவு ஏற்பட்டதும் கனம் நீதிபதி எதிர்க்கு மேற்சொன்ன தண்டனையை விதித்தார்.

## தஞ்சை தோழர்களுக்கு!

தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக கமிட்டிக் கூட்டம் 10-2-52-ல் திருவாரூர் கருணநிதி அச்சகத்தில் நடைபெறுவதாக இருந்தது தவிர்க்க முடயாத காரணங்களால் 17-2-55 ஞாயிறு அன்று ஒத்திவைக்கப்பட்டுளளது.

ஆகையால் 17-2-52 ஞாயிறு காலை 10 மணிக்கு மேற்படி கமிட்டிக் கூட்டம் திருவாரூர் கருணநிதி அச்சகத்தில் நடைபெறும் இம் மாவட்டத்திலுள்ள கழக உறுப்பினர்கள் யாவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். அது சமயம் ஆக்க வேலைகள் குறித்தும், மாநாடு நடத்துவது குறித்தும் முடிவு செய்யப்படும்.

இ. ரா. தென்னவன்
செயலாளர்

## சென்னையைப் பற்றிய பிரச்னை

தீர்த்து வைக்க நீதிக்குழுவா?

சென்னை, பிப் 8—

சென்னை நகரம் யாரைச் சேர்ந்தது என்பதை முடிவு செய்யும் பொறுப்பை மத்யஸ்தத்திற்கு விடலாம் என்று சுவாமி சீதாராம் கூறும் யோசனையைத் தமிழர்கள் ஏற்கவேமாட்டார்கள் என்று காமராஜ் நாடார் கூறினர்.

ஆந்திர ராஜ்யம் கோரி சுவாமி சீதாராம் கிளர்ச்சி செய்வதற்கு ஏதோ அரசியல் காரணங்கள் இருக்க வேண்டும் என்றும் பிரகாசம் முதல் மந்திரியாகிவிட்டால் இந்தக்கிளர்ச்சியே இராது எனறும காமராஜ் கூறினர்.

சத்தியாக்கிரகத்தால் யாதொரு பலனும் இருக்காது என்றும் ஆந்திர மாகாணம் பற்றி காரியக்கமிட்டி விவாதிக்கவில்லை யென்றும் அவர் கூறினர்.

சென்னை நகரம் பற்றி இதர ...களையும் மத்தியஸ்தத் ...வதுபற்றியது தமிழர் ...தை திணிக்க ...து சுவாமி ... செய்ய ... கூறி

## தீக்குச்சித் தொழிலுக்கு மூலப் பொருள்கள்

சென்னை. பிப். 7—

தீக்குச்சிக் கைத்தொழில் பிரதேச ஆலோசனை போர்டு சமீபத்தில் சாத்தூரில் கூடி அடியிற்கண்ட சிபார்சுகளைச் செய்துள்ளது.

தீக்குச்சி உற்பத்திச் சம்பந்தமாய் யோசனைகூற வெளிநாட்டு நிபுணர் ஒருவரை ஐ. நா. ஸ்தாபன மூலம் கிடைக்கும் நான்காவது அம்சத் திட்டத்தின்கீழ் வரவழைக்கும்படி இந்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்ளவேண்டும்.

தீக்குச்சி உற்பத்திக்கான மூலப்பொருள்களைக் கொள் முதல் செய்து கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கே விநியோகிக்க ஒரு ஸ்தாபனம் நிறுவவேண்டும் இந்த ஸ்தாபனம் கைத்தொழிலாளர் சர்க்கார் இவ்விருவருடைய கூட்டு முயற்சியாக இருக்கவேண்டும் இந்த ஸ்தாபனத்தின் மூலதனம் மதிப்பீடான ரூ 3 லட்சத்தில் சர்க்கார் 51 சதவிகிதம் முதலிடவேண்டும்.

கையினுல் செய்யப்பட்ட தீக்குச்சிகளுக்கு நல்ல கிராக்கி ஏற்படும் வரையில் அதற்கு விற்பனை வரி ஒரே இடத்தில் மட்டும் (அதாவது தொழிற்சாலையில்விற்கப்படும்பொழுது, விதிக்கப்படவேண்டும்.

## திருமணம்

குடந்தை தோழியர் க. இராசலட்சுமிக்கும் கூறைநாடு. தோழர் இரா சு. சுவாமிநாதன் அவர்கட்கும் 'தொண்டு' குரவர். தோழர் வி. வீராசாமி (பி. ஏ. எம். பி.) அவர்களது தலைமையின் கீழ் 8-2-52 வெள்ளிக்கிழமை காலை 9 மணி அளவில் குடந்தை-சாரங்கபாணி கீழவீதி 36-ம் எண்ணுள்ள உள்ளுறையில் திருமண விழா நடைபெறும்.

தோழர் பி நடராசன் அவர்களது சகோதரர் செல்வன் பி. தங்கராசுக்கும தோழர் பிலிப் அரசு அவர்களது செல்வி புட்பமணிக்கும் 10-2-52 ஞாயிறு காலையில் சென்னைக் கீழ்ப்பாக்கத்தில் தோழியர் அலமேலு அப்பாத்துரை அவர்கள் தலைமையில் திருந்திய மணவிழா நடைபெறும். அறிஞர் கா. அப்பாத்துரை அறவுரை அளிப்பார்.

## சோஷலிஸ்டு நிர்வாகக் கமிட்டித் தலைவர்

தேர்தலில் தோற்ருர்

லக்னோ, புப். 7—

இந்திய சோஷலிஸ்டு கட்சி நிர்வாகக் கமிட்டித் தலைவர் ஆசார்ய நரேந்திர தேவ் தேர்தலில் தோல்வி அடைந்து விட்டார் உத்தரப் பிரதேச அசெம்பிளி தொகுதியில் அவரை எதிர்த்த காங்கிரஸ் அபேட்சகர் மதனகோபாலனுக்கு அவரை காட்டிலும் 457 வோட்டுகள் அதிகம் கிடைத்தன,

## தோல்விப் படலம்

6-2-52 வரை

| | |
|---|---|
| **திருவாங்கூர்-கொச்சி (பூர்த்தி** | |
| காங்கிரஸுக்கு | —44 |
| எதிர்கட்சியினருக்கு | —64 |
| **ஹைதராபாத் (பூர்த்தி)** | |
| காங்கிரஸுக்கு | —93 |
| எதிர்கட்சியினருக்கு | —82 |
| **பம்பாய்** | |
| காங்கிரஸுக்கு | —269 |
| எதிர்கட்சியினருக்கு | —45 |
| **ஒரிசா** | |
| காங்கிரஸுக்கு | —66 |
| எதிர்கட்சியினருக்கு | —72 |
| **மத்திய பிரதேசம்** | |
| காங்கிரஸுக்கு | —192 |
| எதிர்கட்சியினருக்கு | —37 |
| **அஸ்ஸாம்** | |
| காங்கிரஸுக்கு | —73 |
| எதிர்கட்சியினருக்கு | —27 |
| **மைசூர்:** | |
| காங்கிரஸுக்கு | —71 |
| எதிர்கட்சியினருக்கு | —23 |
| **மே. வங்காளம்** | |
| காங்கிரஸுக்கு | —144 |
| எதிர்கட்சியினருக்கு | —83 |
| **பீகார்** | |
| காங்கிரஸுக்கு | —203 |
| எதிர்கட்சியினருக்கு | —83 |
| **ராஜஸ்தான்:** | |
| காங்கிரஸுக்கு | —69 |
| எதிர்கட்சியினருக்கு | —72 |
| **பாட்டியாலா:** | |
| காங்கிரஸுக்கு | —23 |
| எதிர்கட்சியினருக்கு | —33 |
| **கி. பஞ்சாப்** | |
| காங்கிரஸுக்கு | —90 |
| எதிர்கட்சியினருக்கு | —24 |

## சர்க்கரை விலை வீசை அரை அணு!

வேலூா, பிப் 7—

ஜாவாவில் கரும்பு உற்பத்தி 100 வருஷங்களில் 10 மடங்கு அதிகரித்துள்ளது. அங்குச் சர்க்கரையின் விலை 6 பவுண்டிற்கு 1 அணுவே (அதாவது 1 வீசை சர்க்கரை ரு 0-0-6 இத்தகவலை கரும்பு சாகுபடி நிபுணர் டாக்டர் சி. வான் தில்லிவிஜன் என்பவர் குடியாத்தம் விவசாயிகள் தின கூட்டம் ஒன்றில் அறிவித்தார்.

## மிளகு சாகுபடி அதிகரிப்பு

சென்னை பிப் 7—

1951 டிசம்பர் 25-ந் தேதி வரை மலையாளம், தென்கன்னடம், நீலகிரி ஆகிய ஜில்லாக்களில் மிளகு சாகுபடியான நிலங்களில் மொத்த பரப்பு 1,05,600 ஏக்கர்களாகும் சென்ற வருஷத்தில் இந்தக் காலத்தில் மிளகு சாகுபடியான நிலங்களின் மொத்த பரப்பு 104700 ஏக்கர்கள் எனவே சென்ற வருஷத்தைக் காட்டிலும் சுமார் ஒரு சதவிகிதம் விளைச்சல் பிரதேச அளவு அதிகரித்துள்ளது மிளகின் விலை உயர்வே இந்த அதிக அளவு சாகுபடிக்குக் காரணமாகும்.

## ஆசிரியருக்கு முடங்கல்

ஐயா :—வணக்கம் இன்று மாலை (4-2-52) பல்லடம் பட்டேல் ரோடில் உயர்தரப் பள்ளி மாணவர் விடுதி அருகில் சோஷலிஸ்ட் கட்சி செயலாளர் ப சு சின்னத்துரை அவர்களை ரோட்டில் சந்தித்தேன். அப்பொழுது பல்லடம் ஜவுளி லைசன்ஸ் தரும் காங்கிரஸ்காரரும் ஆன சி. நாராயணசாமி நாயுடுவும் கூட இருந்தார். அப்பொழுது சின்னதுரையைப் பார்த்து நாராயணசாமி நாயுடு, சோஷலிஸ்ட் கட்சிதான் தோற்று விட்டதே நீங்கள் காங்கிரஸில் சேர்ந்து கொள்ளுங்கள் என்று கேட்டார். அதற்கு நான் கரங்கிரஸ்தான் தோல்வி அடைந்து விட்டதே. எதற்காக மற்ற கட்சிகாரரை ... நீ ஜாக்கிரதையாகப்பேசு, மீறிப் பேசினுல் நான் யார் என்பதைக் காட்டி விடுவேன் என்ருர். அதற்கு நான் காங்கிரஸ் சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் செல்வாக்கு இழந்து விட்டதே என்று தேர்தல் முடிவைச் சுட்டிக்காட்டி கேட்க, நாராயணசாமி நாயுடு ஓங்கி என் கன்னத்தில் அறைந்து விட்டார் உடன் இருந்த சின்னதுரையும் பொது மக்களும் என்னை விலக்கிவிட்டார்கள் அப்பொழுது நாராயணசாமி நாயுடு இதோடு உன்னை விட்டேனு உனக்கு ஏற்ற முடிவு காட்டுகிறேன் பார் என்று கூறியும் வாயில் வந்தபடி வசை பாடியும் சென்று விட்டார் கடந்த இரண்டு மாதமாக நான் தேர்தல் பிரசாரத்தில் காங்கிரசுக்கு எதிராகவும் லைசன்ஸ்தாரர், கள்ள மார்கெட்காரர் ஆகியோரின் ஊழல்களைப் பற்றியும் மிக விரிவாக நற்பிரசாரத்தையும் மக்களிடத்தில் செய்துள்ளேன். இதற்கு முன்பும் ஒரு பயமுறுத்தற் கடிதம் வந்துள்ளது அதைப் பற்றி பொதுக் கூட்டத்தில் சொல்லி யுள்ளேன்,

(சமீபத்தில் இந்த மா வட்டத்தில் வெற்றிபெற்ற காங்கிரஸ் எம் எல் ஏக்களும், ஊழியர்களும் ஒரு விருந்தில் பல்லடத்திற்கு அருகில் கலந்து கொண்டனர் அந்த விருந்தை ஏற்படுத்தியவர்களில் மேற்படி யாரும் ஒருவர் மேற்படி சந்தில் மாவட்டத்தில் காங்கிரசைப் பலப்படுத்த திட்டம் தீட்டப்பட்டது அத்திட்டத்தில் ஒரு பகுதியாக இருக்கலாம் இச்சம்பவம் என்று மக்கள் பேசிக்கொள்கிருர்கள்

பி. எம். பொன்னுச்சாமி
தி. மு. க, செயலாளர்
பல்லடம்

## நிறுவல் விழா

25-12-51 ம் தேதி சோத்தம்பட்டியிலுள்ள பொது மக்கள் கூடி கிராம முன்னேற்ற சங்கம் என்ற ஒரு கூட்டுறவுச் சங்கத்தை நிறுவினர் அதற்கு முறையே தலைவர் கு சுப்ரமணியம் பொருளாளர் தி சதாசிவம் ஆகியோர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 11 பேர்கள் கொண்ட ஆய்வுக்குழு ஒன்றும் நிறுவப்பட்டது,

## அதிக உணவு உற்பத்தி இயக்கத்தின் பலன்

விசாரணை நடத்த ஒரு கமிட்டி

புதுடில்லி பிப் 6—

அதிக உணவு உற்பத்தி இயக்கம் பற்றி விசாரணை நடத்துவதற்காக ஒரு கமிட்டியை நியமிக்க இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. திட்டக் கமிஷன் மெம்பர் வி டி கிருஷ்ணமாச்சாரி அக்கமிட்டியின் தலைவராயிருப்பார் தென்னிந்தியாவைச் சேர்ந்த ஒரு மெம்பரும் அக்கமிட்டியில் இருப்பார்.

(1 எந்தெந்த காரியங்களுக்கு பணம் செலவிடப்பட்டிருக்கிறது (2) அவற்றின் பலாபலன் ரசாயன உரம் முதலிய வசதிகள் (3) விவசாய டெமான் ஸ்ட்ரேட்டர்கள் அளிக்கும் யோசனைகளின் உபயோகம் (4) செலவுக்கேற்ற பலன் உண்டா (5) அபிவிருத்திக்கான வசதிகள் (6) இதர சிபாரிசுகள் ஆகியவைப்பற்றி அக்கமிட்டி விசாரணை நடத்தும். 6 மாத காலத்திற்குள்ளாக அக்கமிட்டி அறிக்கை ...

## இனி நடப்பவை

கோவை:—10-2-52 ஞாயிறு மாலை 6 மணிக்குப் புதுமார்க்கட் காந்தி சவுக்கில் தென் கோவை தி. மு. க. சார்பில் ஓர் கூட்டம நடைபெறும். தோழர் என். எஸ். இளங்கோ, எஸ். எ. ராஜமாணிக்கம் மற்றும் பலர் பேசுவார்கள்.

பொன்னேரி — பொன்னேரி தாலுக்கா, மீஞ்சூரில் திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்தல் குறித்தாலோசித்து முடிவு செய்ய 10-2-52 மாலை 4 மணிக்கு மீஞ்சூர் சினிமா கொட்டகைக்கு எதிரில் ஓர் ஆய்வுக்குழுக் கூட்டம் நடைபெறும்.

பேராவூரணி:— திராவிட முன்னேறறக் கழக 3-ம ஆண்டு விழாவும், அழகிரி பகுத்தறிவுப் படிப்பக 2-ம் ஆண்டு விழாவும் 10-2-52 ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்குப் பேராவூரணி பந்தடித் திடலில் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் தலைமையில் நடைபெறும். வேலூர் சி. பி. சிற்றரசு நாடும் ஏடும என்பது பற்றியும், நாகர்கோவில் கி. மனோகரன் அரசியலும் மக்களும் என்பதுபற்றியும், என். எஸ். இளங்கோ படிப்பகமும் பகுத்தறிவும் என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றுவார்கள்.

நெல்லிக்குப்பம் :— 12-2-52 அன்று நெல்லிக்குப்பம் தி. மு. கழகச்சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் இரா. நெடுஞ்செழியன், ஏ. கே. வேலன சொற்பொழிவாற்றுவாகள்.

பெங்களூர்:-17-2-52 ஞாயிறு மாலை 5 மணிக்குப்பெங்களூர் அக்கிப்பேட்டை சிக்க லால் பார்க்கில் ஆ. ந. ஈசுவரன் அவர்கள் தலைமையில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுவார்.

என். வி. என் சுற்றுப்பயணம்

| | | |
|---|---|---|
| பிப்ரவர் | 8 | முக்கூடல் |
| ,, | 9 | களக்காட்டூர் |
| ,, | 10 | நெல்லை |
| ,, | 11 | சென்னை வருகை |

## சென்னை சட்டசபை ம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கூட்டம்

கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சென்னை சட்டசபை உறுப்பினர்களின் கூட்டம் 11-2-52 காலை 10 மணிக்கு சென்னையில் நடைபெறுமென்றும், அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் அஜாய் கோஷ் அவர்கள் கலந்துகொள்கிருர்கள் என்றும் அந்தக் கூட்டத்திற்கு இந்த அவசர அழைப்பை யேற்று உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்றும் தோழர் ஏ. கே கோபாலன் அவர்களும் தோழர் பி. ராமமூர்த்தி அவர்களும் வேண்டிக் கொள்கிருர்கள்.

## கூட்டு மந்திரி சபை கோரிக்கை தினம்

### 9-2-52 சனி மாலை 5-30 மணிக்கு

பிரம்பூர் பாரக்ஸ் கான்ரான்ஸ்மித் நகர் மைதானத்தில்

### பொதுக்கூட்டம்

தோழர்கள் A K கோபாலன் M. P. M. கல்யாண சுந்தரம் M. L. A. K. T. ராஜு M. L. A. மற்றும் பலர் பேசுவர்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press 2/4 Mutnu mari Chetty St Madras-1,